பக்கங்கள்: 12+IV=பதினாறு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 14 சனிக்கிழமை (30-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:04

# அரசின் பகுதிகளில் புலிகளின் நிர்வாக அமைப்புகள் இல்லை!

## கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸ்மா அதிபரும் உறுதி

கொழும்பு,நவம்பர்30

**அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலையங்களோ, நீதிமன்றங்களோ அமைக்கப்படவில்லை.**

**இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜாவும் இவ்வாறு அறிவித்திருக்கின்றனர்.**

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் நீதிமன்றங்கள், பொலீஸ் நிலையங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து விசாரணை நடத்துமாறும், அவ்வாறு இருந்தால் அவற்றை மூடிவிடும்படியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்தே கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸ்மா அதிபரும் இவ்வாறு அறிவித்திருக்கின்றனர்.

பொலீஸ்மா அதிபர் தனது அறிக்கையை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் வழங்கியிருக்கிறார்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் நீதிமன்றமும் பொலீஸ் நிலையங்களும புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுப் பற்றி அரசுடன்தான் தொடர்பு என்றாலும் ஜனாதிபதிக்குத் தகவல்கள்

### செய்தியாளர்களிடம் ஹெல்கிஸன் தெரிவிப்பு

ஒஸ்லோ,நவ.30

"இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகப் பணிபுரியும் நோர்வே, இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிட விரும்பவில்லை. எனினும், இந்த முயற்சி தொடர்பான தனது நடவடிக்கைகளை பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணிக்கு அது அறிவிக்கவுமில்லை. நாம் அரசுடன்தான் தொடர்புகளை வைத்திருக்கிறோம். ஆனால, சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் அவரது ஆலோசகர் கதிர்காமருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தகவல் தெரிவிக்க நாம் தவறுவதில்லை."

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஒஸ்லோவில் தம்மைச் சந்தித்த இலங்கைப் பத்திரிகையாளரிடம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பான சமரச முயற்சியில் நோர்வே ஈடுபட்டது. கணிசமான வெற்றி காணப்பட்டது. அங்கு ஆரம்பத்தில் நோர்வேயின் அனுசரணையாளர் பணி மிகவும் இரகசியமாகவே

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சு ஓர் அதிசயம்! வியப்பு, மகிழ்ச்சி கலந்த வர்ணனை

### நோர்வே முன்னாள் வெளியுறவு அமைச்சர்

ஒஸ்லோ,நவ.30

'கொடூரப்போரில் ஈடுபட்டு வந்த இருதரப்புக்கள் இவ்வாறு யுத்தத்தை நிறுத்தி, பேச்சு மேசையில் அமர்ந்து கைகுலுக்கிக் கொள்வார்கள் என்று சரியாக ஒருவருடத்துக்கு முன்னர் நாம் எதிர்பார்த்திருக்கவில்லை ஆனால், அந்த அதிசயம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது.'

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும்சமாதானப் பேச்சுக்கள் நடததும் போக்குத் தொடர்பாக இவ்வாறு மகிழ்வும் வியப்பும் தெரிவித்தார் நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தோர்ப்ஜோன் ஜக்லண்ட்.

நோர்வேத் தொழில்கட்சித் தலைவரான அவர் கடந்த வருடம்வரை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிவந்தவர் இவர் வெளிவிவகார அமைச்சராக இருந்த சமயமே, இலங்கை இனப்பிரச்சினை வ்விவகாரத்தில் நோர்வே அனுசரணையாளராகப் பணியாற்றப் போகின்றது என்ற அறிவிப்பை ஜனாதிபதி குமாரதுங்க விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நோர்வேயின் வெளிவிவகார நிலையியல் குழுவின் தலைவராகப் பணியாற்றும் ஜக்லண்ட் நோர்வே நாடாளுமன்றக் கட்டடத்தில் வைத்து தன்னைச் சந்தித்த இலங்கைச் செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிவிவகார நிலையியல் குழுவைச்சேர்ந்த மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் அப்போது மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினை விவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்த ரூ.2.5 கோடி

### அமைச்சர் கூட்டிய கூட்டத்தில் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவை சகல வசதிகளும் கொண்டதாக மேம்படுத்தி, அப்பிரிவு இயங்க மூன்று மாடிக் கட்டடம் ஒன்றும் அமைக்க 2கோடி 50 லட்சம் ரூபா வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கூட்டிய மாநாட்டில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய கடந்த புதன் கிழமை கூட்டப்பட்ட இந்த மாநாட்டில் சுகாதார அமைச்சர் தயாரத்தின, அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ. வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா - ஹக்கீம் கொழும்பில் சந்திப்பு

கொழும்பு,நவ.30

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணாவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் கொழும்பில் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

ஒஸ்லோ செல்லும் வழியில் கொழும்பில் நோர்வே தூதரின் இல்லத்தில் கருணா தங்கியிருந்த சமயமே ஹக்கீம் அவரைச் சந்தித்தார்.

கிழக்கு மாகாண நிலைவரம் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.

(ஒ-3)

## தமிழ்ச்செல்வன், கருணா இருவரும் ஒஸ்லோவில்!

ஒஸ்லோ,நவ.30

நாளை மறுதினம் ஒஸ்லோவில் ஆரம்பமாகவிருக்கும் 3.ஆம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா ஆகியோர் நேற்றிரவு ஒஸ்லோவை வந்தடைந்தனர்.

நேற்றுமுன்தினம் வன்னியில் இருந்து ஹெலி மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை சென்றடைந்த தமிழ்ச்செல்வன், கருணா ஆகியோர் கொழும்பில் நோர்வே தூதரின் இல்லத்தில் தங்கியிருந்தனர். அவர்களுடன் தமிழ்ச்செல்வனின் உதவியாளர்களான அலெக்ஸ், தொல்காப்பியன், நெடியோன் ஆகியோரும் சென்றுள்ளனர்.

நேற்று கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்ட தமிழ்ச்செல்வன் குழுவினர் பாரீஸ் விமான நிலையத்தை நேற்று மாலை சென்றடைந்தனர். அங்கிருந்து புறப்பட்டு இலங்கை நேரப்படி நேற்றிரவு 8.30 மணிக்கு இவர்கள் ஒஸ்லோ வந்தனர். இவர்களுடன் நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க்கும் வந்திருந்தார்.

இவர்களை நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்றார்.

ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள குழுவினர் இன்று பேச்சு நடைபெறவுள்ள ஹோட்டலுக்குச் செல்வர்.

(ஐ-3)

## நெடுந்தீவு நிலைமை பற்றி கவனயீர்ப்பு பிரேரணை!

யாழ்ப்பாணம்,நவ.30

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறும் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் ஒத்திவைப்பு வேளையில் நெடுந்தீவு விவகாரம் குறித்து கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கொண்டுவருகின்றார்.

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விவாதத்தில் ஒத்திவைப்பு வேளையில் அமைச்சர் மகேஸ்வரன் நெடுந்தீவு விவகாரம் தொடர்பாக கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர சபாநாயகருக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ள இந்த நேரத்தில் கடற்படையினர் நெடுந்தீவு பிரதேச சபைக் கட்டடத்தில் முகாம் அமைத்துள்ளனர். இதனால் அந்தப் பிரதேச மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் அந்தப் பிரதேச மக்களின் விருப்பத்துக்கு எதிராக பொலீஸ் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அங்கு தங்கியுள்ளனர். இவர்களின் பிரசன்னம் காரணமாக முக்கிய பாதைகள் மூடப்பட்டுள்ளன. ஆஸ பத்திரி, சந்தை, உதவி அரச அதிபர் அலுவலகம் ஆகியன 14நாள்களாக மூடப்பட்டுக் கிடக்கின்றன.

பாதிக்கப்பட்டுள்ள அன்றாடப் பணிகள் வழமைக்குத் திரும்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

(ஐ-3)

## லண்டனில் பாலா இன்று உரை

லண்டன்,நவ.30

லண்டன் அரீனா மண்டபத்தில் இன்று இடம்பெறும் மாவீரர் நாள் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றவுள்ளார்.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கள் மற்றும் சமகால நிலைமை தொடர்பாக அவர் உரையாற்றுவார்.

*(விவரமான செய்தி 5 ஆம் பக்கத்தில்)* (ஐ-3)

## வாந்திபேதி பீடித்த ஒருவர் நேற்று ஆஸ்பத்திரியில் மரணம்

### நோய் மேலும் பரவும் அச்சம்

யாழ்ப்பாணம்,நவ.30

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட வயதான பெண்மணி யாழ். மருத்துவ மனையில் நேற்று உயிரிழந்தார். வாந்திபேதி நோய் மேலும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த அச்சுலிங்கம் செல்லம்மா (வயது 68) என்ற பெண்மணியே மரணமானவராவார்.

வாந்திபேதி நோயால் பீடிக்கப்பட்டு கடந்த 27ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சைக்குட்படுத்திய இரு நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

கிருமித் தொற்றைத் தடுக்கும் நடவடிக்கையாக இறந்தவரின் சடலம் பெட்டியில் வைத்து சீல் செய்யப்பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்டது.


இதேவேளை, ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த மற்றொரு பெண்மணி வாந்திபேதி நோயால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 26ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கான பூர்வாங்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஒ-15)

## ஐக்கிய இலங்கையில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி

# பாலா கூறியது பிரபாவின் உரையில்:

# சபையில் பிரதமர் மகிழ்ச்சி அறிக்கை



## அரசு - புலிகள் நிலைப்பாட்டில் மாற்றமில்லை
## அரசியல் பேச்சுக்களால் நல்ல பயன்

கொழும்பு,நவம்பர்.30

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சி தெரிவித்து நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமர் அறிக்கை வெளியிட்டார்.**

**ஒஸ்லோவில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியபோது அவர் கூறிய அதே கருத்தைத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். 'ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி." இதுதான் அவர்களின் இன்றைய அரசியல் நிலைப்பாடு. இதற்கும் ஐக்கிய இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் என்ற அரசின் கொள்கைக்குமிடையில் வித்தியாசம் இல்லை. எனவே அரசியல் பேச்சுக்கள் பலன் அளிக்கும் என்ற நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்படுகின்றன என்றார் பிரதமர்.**

இலங்கை அரசின் குழு, விடுதலைப் புலிகள் குழு மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் சுமார் 40 நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாடு பற்றிச் சபைக்கு அறிவிக்கும் முகமாக வெளியிட்ட அறிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒஸ்லோ உட்பட இதுவரை நடைபெற்ற பேச்சுக்கள், நாம் இணக்கமாக இருக்கும் விடயங்களை இனங்காண உதவியிருக்கின்றன. அரசியல் பிரச்சினைகள் எப்பொழுது ஆராயப்பட வேண்டும் என்ற கட்டத்தை நாம் இப்பொழுது அடைந்திருக்கிறோம்.

அரசியல் பிரச்சினைகள் தொடர்பான கட்டமைப்புக் குறித்து, எதிர்காலத்தில் முன்னேற்றம் காண முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து எனது அரசு மகிழ்ச்சியடைகிறது. அடுத்த சில மாதங்களில் ஏற்படும் அபிவிருத்திகள் குறித்தும் மகிழ்ச்சியடைகிறோம். இச் செயற்பாட்டுக்கு சட்டாஹிப்பிலும், நக்கொன பத்தோமிலும் நடைபெற்ற பேச்சுக்கள் பலமான அடித்தளமிட்டிருக்கின்றன.

ஒஸ்லோ கூட்டத்தின் பெறுபேறுகளை அடுத்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுப்படுத்துவது தொடர்பான சில முக்கிய விடயங்களை அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும் அரச குழுவினருக்கு நான் ஆலோசனை கூறியிருக்கிறேன். அரச அமைப்புக்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் அவற்றில் உள்ளடங்கும். அடுத்த கட்டத்தை நோக்கி நகர, புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுப்படுத்தப்படுவது அவசியமானதாகும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமரச அரசியல் தீர்வுகாணும் இலங்கையின் குறிக்கோளை அடைவதற்கான வாய்ப்பபை நாம் தவறவிடக் கூடாது. அந்தக் குறிக்கோளை ஒஸ்லோ கூட்டம் பூர்த்தி செய்திருக்கிறது.

சமாதானச் செயற்பாட்டுக்கு, ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம், முழுமனதுடனான ஆதரவுக்கு உறுதியளித்திருக்கிறது. இனப்பிரச்சினைக்கு சமரச அரசியல் தீர்வு காண்பதற்கான தனது அர்ப்பணிப்பைப் புலிகள் இயக்கம் முதல் தடவையாக சர்வதேச நாடுகளிடம் உறுதிப்படுத்தியிருக்கிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை நான் ஜப்பானில் மேற்கொள்ளும் விஜயம், எமது நாட்டுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளைக் கொண்டு வரும். அடுத்த ஆண்டு மார்ச மாதத்தில் நடைபெறும் தமது மாதாந்தப் பேச்சுக்களுக்கான இடமாக டோகியோவைத் தெரிவு செய்யும்படி, ஜப்பானிய அரசு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. அந்த அழைப்பை எனது அரசு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது.

- இவ்வாறு பிரதமர் சொன்னார். (ஒ)

## ஒஸ்லோ பேச்சில் இந்தியப் பிரதிநிதி கலந்து கொள்ளாதது குறித்து விளக்கம்

கொழும்பு, நவ.30

ஒஸ்லோவில் நடைபெற்ற அரசு - புலிகள் பேச்சுக்களில் இந்திய அரசுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாததேன் என்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம் குறித்து சபையில் பிரதமர் அறிக்கை விடுத்ததை அடுத்து ஜே.வி.பி உறுப்பினர் விமல் வீர வன்ஸ எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதமர் இந்த விளக்கத்தை அளித்தார்.

பிரதமர் அப்பொழுது கூறியதாவது:-

அமெரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள சட்டங்கள் மாறுபட்டவை. இந்தியாவில், தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்துடனான பேச்சுக்களில் அரசுப்பிரதிநிதிகள் அல்லது அதிகாரிகள் கலந்துகொள்ள அந்நாட்டு அரசு அனுமதிப்பதில்லை, அதனால்தான் இந்தியா அப்பேச்சுக்களில் பங்கேற்கவில்லை.

ஆயினும், ஆரம்பநிகழ்ச்சியில் மட்டும் இந்தியா கலந்துகொண்டது. நோர்வேக்கான இந்தியத்தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தியை ஒஸ்லோவில் சந்தித்துப் பேசினேன். இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

## அதிகாரிகள் - உறுப்பினர்கள் வாக்குவாதம்
# யாழ். மாநகராட்சி கூட்டம் டிச. 4 வரை ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம்,நவ.30

நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபைக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையேயான விவாதம் சூடேறியதால் கூட்டத்தை தொடர்ந்து அமைதியாக நடத்த முடியவில்லை. இதனால் முதல்வர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் இந்து விடுதியில் முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் தொடங்கியது.

கூட்டமைப்பைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் செ.விஜயரத்தினம் கூட்டத்தில் பேசினார் அப்போது அவர் கூறியதாவது:-

இன்று நடைபெறும் கூட்டத்துக்கு மாநகர சபை உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகமளித்திருந்தபோதும் அதிகாரிகள் காலந்தாழ்த்தியே வருகை தந்துள்ளனர். அவர்களின் நடவடிக்கை சபையை அவமதிக்கும செயல் இவர்களுக் கெதிராக நான் கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறேன்.

கடந்த மாதம் நடைபெற்ற மாதாந்தக் கூட்ட அறிக்கை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிற்கு ஏழு தினங்களுக்கு முன் வழங்கப்பட வேண்டும். ஆனால், அவ்வறிக்கை நேற்றுமுன்தினமே உறுப்பினர்களுக்கு முதல்வரின் கையொப்பமின்றி வழங்கப்பட்டுள்ளது. இதனையும் கண்டிக்கிறேன். அறிக்கை தாமதமாகத் தரப்பட்டமையால் அறிக்கை பற்றிய விவாதம் இன்று நடைபெறுவதற்கு இடமளிக்க கூடாது என்று தெரிவித்தார்.

இவரது உரையையடுத்து சுமார் ஒரு மணித்தியாலம் சபையில் வாதப் பிரதி வாதங்கள் நடந்தன.

மாநகரசபை உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் வாக்குவாதம் சூடுபிடித்து தொடர்ந்தது. இதனையடுத்து முதல்வர் கூட்டத்தை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.(ஒ-5)

## அன்னுங்கைப் பகுதியில் கசிப்பு முற்றாகத் தடை!
### பொது அமைப்புக் குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.30

உடுப்பிராய் மேற்கு அன்னுங்கை பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் இன்று முதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று பொது அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

இத்தடையை மீறுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.




யாழ். திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைதிக்கான இலக்கிய வாதிகள் மற்றும் கலைஞர்கள் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அருட் தந்தை மரிய சேவியர் அடிகளார் உரையாற்றுவதையும், கலைஞர்கள் ஏ.ஜேசுராஜா, காஸ்ரன் டி றொசேரோ, நிகழ்வுக்கு தலைமை தாங்கிய சி.வி.கே.சிவஞானம் கவிஞர் சோ.பத்மநாதன் மற்றும் மாநாட்டில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படம்:ரமணன்)*

### கல்வியியற் கல்லூரி மாணவர்களின் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி மாணவர்களின் நவம்பர் மாதக் கொடுப்பனவு, டிசெம்பர்மாத விடுமுறை காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை பீடாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளகப்பயிற்சி மாணவர்களை அன்று காலை 9.30 மணிக்கு சமுகமளிக்கும்படி பீடாதிபதி கேட்டுள்ளார். (ஐ-3)

### கைகலப்பில் மனிதக்கடி கொட்டன் அடி!

யாழ்ப்பாணம்,நவ.30

கழிவு நீர் வடிகால் பிரச்சினையால் பெண்ணின் கடிக்கும் கொட்டன் அடிக்கும் இலக்கானதாகக் கூறப்படும் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.டேவிற் வீதியில் நேற்று இடம்பெற்ற இந்தக் கைகலப்பில் எஸ்டிசிறில் (வயது 55) என்பவருக்கு பெண்மணி ஒருவர் தாடையில் கடித்த வேளை, தலையில் கம்பியால் அடி விழுந்ததாகவும் -

தங்கராசா அன்ரனிஸ் (வயது 20) என்பவருக்கு கொட்டன் அடி விழுந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவருமே யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## இன்று யாழ். வரும்
# மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு வலயத்தைப் பார்வையிடும்

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட உள்ளனர்.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக தலைமையிலான இக்குழுவினர் இன்று இங்கு வருகை தரவுள்ளனர்.

இன்று காலை வருகை தரவுள்ள குழுவினர் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். முற்பகல் 11 மணிக்கு ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ள இவர்கள் பிற்பகல் 3 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடவுள்ளனர்.

நாளைய தினம் காலையில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிடவுள்ளதுடன் பலாலியில் இராணுவ மற்றும் பொலீஸ அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளனர்.

(ஒ-10-5)

# பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் டிசெம்பரில் மழைவர வாய்ப்பு
### வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வடக்கு - கிழக்கு பருவப்பெயர்ச்சி காற்றுடன் மழை பெய்யக் கூடிய வாய்ப்பு உள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இவ்வருடம் கடந்த வருடத்தைவிட இதுவரை குறைந்த அளவு மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது. கடந்தாண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம்வரை ஆயிரத்து 514 மில்லி மீற்றர் மழை பதிவாகியிருந்தது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையிலும் ஆயிரத்து 188 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மழைவீழ்ச்சி குறைந்தமைக்கு காடுகள் அழிப்பு, தொழிற்சாலைகளில இருந்து வெளியேறும் நச்சு வாயுக்கள் போன்றவற்றால் பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-180)

கென்ய தாக்குதல்களின் எதிரொலி

# இஸ்ரேலியப் பிரஜைகள் வெளியேற்றப்படுகின்றனர்

நைரோபி,நவ.30

கென்யாவில் இஸ்ரேலிய இலக்குகள் இரண்டின்மீது அடுத்தடுத்து நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்து அந்த நாட்டில் இருந்து தனது பிரஜைகளை இஸ்ரேல் வெளியேற்ற ஆரம்பித்துள்ளது.

கென்ய நகரான மும்பாஸா நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இஸ்ரேலியர்கள்மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் மற்றும் இஸ்ரேலிய விமானம்மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் ஆகியவற்றை அடுத்தே இஸ்ரேல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

ஹோட்டல்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்தவர்களை கென்யாவில் இருந்து இஸ்ரேலுக்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தது முதல் அங்கிருக்கும் தனது பிரஜைகளையும் வெளியேற்றும் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது. இந்த நடவடிக்கை நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கென இராணுவத்தின் துருப்புக்காவி விமானங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவதற்கென அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் மும்பாஸாவுக்கு வந்துள்ளனர். இஸ்ரேலின் உளவு அமைப்பான மொஸாட்டும் இந்த விசாரணைகளில் இணைந்துள்ளது.

அதேசமயம் -

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களை நீதி என்றும் மன்னிக்காது என்றும் கென்ய அரசு தெரிவித்துள்ளது.

தாக்குதல் தொடர்பாகத் தாம் இரு நபர்களை விசாரணை செய்து வருவதாகவும் ஆனால், தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் கென்ய பொலீஸார் கூறினர்.

இந்தத் தாக்குதலுக்கு அடையாளம் தெரியாத ஆயுதக் குழு ஒன்று உரிமைகோரியுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். பலஸ்தீனர்கள் அகதிகளாக்கப்பட்ட 55ஆவது ஆண்டு நினைவாக உலக நாடுகளின் காதுகளில் 'அகதிகளின் குரல்' ஒலிக்கவேண்டும் என்பதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்தக் குழு தெரிவித்துள்ளது.

(ம)



கென்யாவில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற ஹோட்டலில் புலனாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய அதிகாரிகள்



கென்யாவில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற ஹோட்டலில் விசாரணைகளில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய அதிகாரிகள் இருவர் தமது பணியை முடித்துக்கொண்டு வெளியே வருகிறார்கள். இவர்களுடன் அமெரிக்க புலனாய்வுப் பணியாளர்களும் இந்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐவரிகோஸ்டில் புதிய மோதல்கள்

அபிஜான்,நவ.30

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்டில் கடந்த சில தினங்களில் ஏற்பட்ட மோதல்களால் தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்தம் முறியும் நிலை ஏற்படாது என்று அங்கு பணியில் உள்ள பிரான்ஸ் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஐவரிகோஸ்டில் இராணுவத்தை விட்டு விலக்கப்பட்டவர்கள் ஒன்று திரண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் அரைவாசிப் பகுதி இவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர் கிளர்ச்சிப் படைகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது. ஆபிரிக்க நாடுகளின் தலையீடு காரணமாக 6 வாரங்களுக்கு முன்னர் இரு தரப்புகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றில் கையொப்பமிட்டன.

ஆனால், சில தினங்களுக்கு முன்னர் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள வவோவா நகரத்தை தாக்கினர். டாங்கிகள் ஆயுதம் தரித்த ஹெலிகள் சகிதம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து கடந்த வியாழனன்று புதிய கிளர்ச்சிக் குழு ஒன்று அரச கட்டுப்பாட்டிலுள்ள மன் என்ற நகரத்தைத் தாக்கியது.

போர் நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணித்து வரும் பிரான்ஸ் இராணுவம், இந்த மோதல்கள், உடன்படிக்கையைப் பாதிக்காது என்று தெரிவித்துள்ளது.

(ம)



ஐவரிகோஸ்ட் நகர் ஒன்றில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சிப்பாய்

# லிகுட் கட்சித் தலைவராக ஷெரோன் மீண்டும் தெரிவு!

ஜெருசலேம்,நவ.30

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் லிகுட் கட்சியின் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் ஷெரோன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பென்ஜமின் நெத்தன்யாகுவை கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து மீண்டும் கட்சித் தலைவராகியுள்ளார்.



வெற்றியின் பின் ஷெரோன்

நெத்தன்யாகுவை விட 15 சதவீத வாக்குகள் அதிகமாக பெற்றார் ஷெரோன். அவர் 55.8 சதவீதமான வாக்குகளையும் நெத்தன்யாகு 40.8 வீதமான வாக்குகளையும் பெற்றனர். மூன்றாவதாகப் போட்டியிட்ட மோஷ் பிக்லின் 3.4 வீத வாக்குகளைப் பெற்றார்.

வலதுசாரிக் கட்சியான லிகுட் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்ற நெத்தன்யாகு கடுமையாக முயன்றபோதும் அது கைகூடவில்லை. அண்மையில் ஷெரோன் தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்ததை அடுத்து நெத்தன்யாகு தலைமைப் பதவியைக் கைப்பற்றுவது இலகுவாக இருக்கும் என்று கருதப்பட்டது.

எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தனது கட்சியை வெற்றி நடைபோட வைக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஷெரோனின் தலையில் இருக்கின்றது.


கட்சியின் தேர்தல் முடிவுகள் வெளியாகி ஷெரோன் வெற்றிபெற்றதாக நேற்று அறிவிக்கப்பட்டபோதும், கென்யாவில் இஸ்ரேலியர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 9 இஸ்ரேலியர்கள் உயிரிழந்ததற்கு அனுதாபம் தெரிவித்து தனது வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளை ஷெரோன் ரத்துச் செய்துவிட்டார். "இது வெற்றியைக் கொண்டாடும் தருணம் அல்ல. இது ஒரு வித்தியாசமான நாள்" - என்றார் ஷெரோன்.

(ம)

## சீனாவில் வருடாந்தம் 2,50,000 பேர் தற்கொலை!

சீனாவில் வருடாந்தம் 2லட்சத்து 50ஆயிரம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. இவர்களின் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் என்ற அதிர்ச்சிகரமான தகவலும் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

கிராமப்புறங்களில் ஏற்படும் பெண்களின் உயிரிழப்புக்களில் தற்கொலைகள் மூன்றாவது இடத்தை வகிப்பதாக ஆய்வுக்கு தலைமைதாங்கிய மருத்துவர் மைக்கல் பிலிப்ஸ் தெரிவித்தார். வருடாந்தம் 20 லட்சம் பேர் சீனாவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.



ஈராக் சென்றுள்ள ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பு அதிகாரி ஒருவர் அங்கு ஆயுத உற்பத்தி நிலை ஒன்றில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# தென்னாபிரிக்கா முழுவதும் பொலீஸார் தீவிர தேடுதல்!

ஜொகன்னஸ்பேர்க்,நவ.30

தென்னாபிரிக்கப் பொலீஸார் நாட்டின் பெரும்பகுதியில் கடும் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அரசுக்கு எதிராக கலவரத்தைத் தூண்டிவிடுவதற்கு வெள்ளையின வலதுசாரிகள் முயன்றது தொடர்பான விசாரணைகளின் ஒரு பகுதியாகவே இந்தத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது தாம் பலரைக் கைது செய்துள்ளதாகப் பொலீஸ் பேச்சாளர் தெரிவித்தர். இவர்கள் அனைவரிடமும் சட்டவிரோத ஆயுதம் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

"உள்ளூர் நேரப்படி காலை 5.00 மணிக்கு இந்தத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் 9 மாநிலங்களிலும் இது மேற்கொள்ளப்பட்டது. நேற்றைய தேடுதலின் முடிவில் நாம் 94 பண்ணைகளிலும் ஆயிரக்கணக்கான வீடுகளிலும் தேடுதல்

உலக அரங்கில்

களை நடத்தியிருந்தோம்" - என்றார் பொலீஸ் பேச்சாளரான சனி டி பீர்.

வியாழனன்று தென்னாபிரிக்காவின் கரையோர மாகாணங்களான கிழக்கு கேப் மற்றும் நட்டல் ஆகியவற்றில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். வேறு பலர் காயமடைந்தனர். இதனையடுத்தே நேற்று வெள்ளியன்று பொலீஸார் தேடுதல் நடவடிக்கையை தீவிரமாக ஆரம்பித்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல்களுக்கு வெள்ளையின வலதுசாரிகளே காரணம் என்று தென்னாபிரிக்க அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் -

அரசுக்கெதிராக கலவரத்தைத் தூண்ட முயற்சித்ததாகக்கூறி வெள்ளையின ஆபிரிக்கர்கள் 20 பேரை இந்த ஆண்டில் பொலீஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் மீது அரசுக்கு எதிராகச் சதி செய்தது என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (10639)

நல்ல நிலையிலுள்ள 50சிறி தொடர் இலக்கமுடைய L.3 Hundred Van, (டீசல்) 4 சிறி ஒஸ்ரீன் கேம்பிறிஜ் கார் (பரினா) என்பன சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச சந்தி. T.P.: 3529, 2867. (11178)

SONY 2182, 2184, G 21 T.V.களும் PANASONIC (ஜப்பான்) டெக்கும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.மகேஸ்வரன், காங்கேசன்துறை வீதி (பாஸ்கரன் பூங்கா முன்பாக), மல்லாகம். (11172)

தொலைத்தொடர்பு நிலையங்களுக்கு உகந்த Go 2 Call தொடர்புடன் உள்ள 633 MHz Computer விற்பனைக்குண்டு. வெளிநாட்டுடன் தொடர்பு கொள்வதற்கு ஒரு நிமிடத்துக்கு 10/= ரூபா மட்டுமே! தொடர்பு: 30, குமாரசாமி வீதி, கந்தர்மடம். (11177)

புத்தம் புதிய Select II LML Scooter விற்பனைக்குண்டு. தொடர்பு: சகி(யி)ன் கொமினிகேசன், 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம. T.P.: 222 2782. (11141)

நல்ல நிலையிலுள்ள TVS CHAMP - 23 மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.T.சம்பந்தர், அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (11149)

சுத்தமான, தூய இன, பூச்சிநீக்கப்பட்ட, வெண்ணிற சடைநாய்க்குட்டிகள் (JAPANESE SPITZ) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: "ஈஸ்வரி வாசம்", இல.4, இணுவில் வீதி, மானிப்பாய். (11138)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. புறொயிலர் 1kg 100/=. சுத்தம் செய்யப்பட்டது. 1kg 170/=. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 3529, 2867. (11179)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயதுடைய, பூரட்டாதி 3ஆம் பாதம் நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 28 உடைய பட்டதாரி ஆசிரியருக்குத் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு விள.இல.1707, C/o உதயன். (11022)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும், தோஷமற்ற, பாவம் குறைந்த, 7இல் செவ்வாய், உத்தரம் 2ஆம் பாதம் உள்ள, 29 வயது பட்டதாரி (B.Sc.) மணமகனுக்கு பொருத்தமான 4 வயது குறைந்த மணப்பெண் தேவை. பெண் தொழில்புரிபவராகவோ, பட்டதாரியாகவோ, உயர்தராதரம் உடையவராகவோ இருத்தல்வேண்டும். தொடர்பு: "சிவசக்தி", 17, கண்டி வீதி, சாவகச்சேரி. (C/25123)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்துக்கு 1969ஆம் ஆண்டு, உத்தரட்டாதி 2ஆம் பாதம், 7இல் செவ்வாய் (பாவம் - 23) உடைய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு: வி.இ.1708, மே/பா. உதயன. (11153)

## திருமண சேவை

1958, செவ்வாய் 12, படித்த, கௌரவ குடும்ப மணமகளுக்கு அரச/தனியார் துறை மணமகன் வேண்டும். வீடு உட்பட சீதனமுண்டு. மணமக்களின் தேவைக்கு நாடுங்கள், துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (11017)

## தவறிவிட்டது

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குமாரசாமி விஜயானந்தன் என்பவரின் தே.அ.அட்டை (இல. 780571837V), ரூ.6500/= பணம் யாழ். நகரை அண்டிய பகுதியில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (11170)




உ
ஐங்கரன் துணை

### கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

### மணவாளக்கோல உற்சவ விஞ்ஞாபனம்

### இன்று(30-11-2002) சனிக்கிழமை


ஐங்கரன் அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருடம் கார்த்திகைத் திங்கள் 14ஆம் நாள் இன்று (30.11.2002) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் விநாயகப் பெருமானுக்கும் மகாலட்சுமிக்கும் சகஸ்ர நாம (1008) சங்காபிஷேகமும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு அஷ்டோத்திர (108) சங்காபிஷேகமும் நடைபெற்று எம்பெருமான் திருவீதி உலா வருதலும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் வருக்கதந்து விநாயகரின் இன்னருள்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக.

*கிரியைகள் யாவும் காலை 8 மணிக்கு*

பிரதம குரு:
சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும்.

(11175) ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை.



உயர் தரம்மிக்க
கனக்டர்ஸ் - அடப்டர்ஸ்
பிளக்ஸ் - சொக்கிட்ஸ்
கோ அக்சில் கேபிள்கள்

BNC* TNC UHF
MINI UHF * N * F
FMA * FME * SMA

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

TV சென்டர் Pvt. Ltd.
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11.
தொ.பேசி: 434742, தொலைநகல்: 437687
மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/மகாஜனா கல்லூரி (கணனி அறை அமைத்தல்) | 250/= | 2000/= |
| 02. | யா/ஸ்கந்தவரோதய கல்லூரி (கணனி அறை அமைத்தல்) | 250/= | 600/= |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் எம் 09ஆம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்துகொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
02. நடைமுறையில் 121/2% G.S.T. நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக 10% வற் (VAT) வரிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 02.12.2002ஆம் திகதியிலிருந்து 05.12.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல்வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
05. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 2மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளித்தல்வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை கட்டடப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றோம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
29.11.2002

(சி-25141)

வீ.இராசையா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல்

## இறைச்சிக்கடைகள் அறிவித்தல் - 01

2003ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2003 மார்கழி 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் கேள்விகள் 10.12.2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00மணிக்குத் திறக்கப்படும். 05.12.2002ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். இது சம்பந்தமான நிபந்தனைகள் 30.10.2002ஆம் திகதிய வலம்புரி, 31.10.2002ஆம் திகதிய உதயன் பத்திரிகைகளில் பார்வையிடலாம். அல்லது நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

| கொக்குவில் உப அலுவலகம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வரிதவிர்ந்தது) |
|---|---|---|---|
| 1. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 350/= | 5000/= | 250000.00 |
| 2. பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 350/= | 5000/= | 100000.00 |
| 2. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 350/= | 5000/= | 126525.00 |
| 4. கோண்டாவில் வடக்கு, அரசடி வீதி மீன்சந்தை | 100/= | 500/= | 1061.00 |

## நல்லூர் பிரதேச சபை மீள் கேள்வி அறிவித்தல் - 02

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (ICTAD) M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்தும், பொது நிறுவனங்களிடமிருந்தும் (நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட) கோரப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் 29.11.2002ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 04.12.2002ஆம் திகதி புதன்கிழமை ந.ப.12.00 மணிவரை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும், சலவைத்த கேள்விகள் யாவும் 05.12.2002ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறும், தங்கள் கேள்விகளை கேள்விப் பத்திரத்தில் நிரப்பி ஒரு பிரதியை *தலைவர், நல்லூர் பிரதேச சபை* என விலாசமிட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலிடவேண்டும். மறுபிரதியை *பி.உ.உ. ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. வேலை விவரம் | கேள்வி வைப்புக் கட்டணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் பெறுமதி சேர் வரி |
|---|---|---|
| 01. கோண்டாவில் கிழக்கு ச.ச. நிலையமும் இந்து இளைஞர் மன்றமும் மீளமைத்தல் | 500.00 | 300.00 |
| 02. கோண்டாவில் மத்திய கிழக்கு பொதுக் கிணறு புனரமைப்பு | 250.00 | 300.00 |
| 03. காளி கோயிலடி ச.ச.நிலையப் புனரமைப்பு | 1250.00 | 300.00 |
| 04. கொக்குவில் சரஸ்வதி ஆலை ஒழுங்கை திருத்தம் | 2000.00 | 300.00 |

## நல்லூர் பிரதேச சபை கூறுவிலை அறிவித்தல் - 03

எமது சபைக்கு கீழ்க்குறித்த வகையான போட்டோப் பிரதி இயந்திரம் தேவையாகவுள்ளது. தகுதிவாய்ந்த வழங்குநர்கள் தங்களது கூறுவிலைகளை (பொருளை தலைமை அலுவலகத்தில் கொண்டுவந்து ஒப்படைப்பது வரையான செலவு உட்பட) அரக்கு முத்திரையிட்ட உறையினுள் உள்ளடக்கி 15.12.2002ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு *"தலைவர், நல்லூர் பிர தேச சபை, திருநெல்வேலி"* என்ற முகவரிக்கு நேரிலோ தபால்மூலமோ அனுப்பிவைக்கவும்.

போட்டோப் பிரதி இயந்திர விவரம்:
Canon NP - 1215 - 01 (ஒன்று)

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*28.11.2002*

(சி-25136)

க.மணிபல்லவராஜன் *(ஜே.பி.யு.எம்.)*
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

உதயன்

## ஒஸ்லோவில் அமெரிக்கா எழுப்பிய பிரச்சினை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமாதான ஆதரவுக் கூட்டம் நம்பிக்கையூட்டும் வகையில மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டது.

மழைவிட்டும் தூவானம் ஓயவில்லை என்ற மாதிரி - கூட்டம் நடந்து முடிந்தும்கூட புலிகளை மையமாக வைத்து எழுப்பப்பட்ட சர்ச்சை ஒன்று பூதாகரமாக்கப்பட்டு வருகிறது.

அதற்கு இந்த நாட்டின் சில ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகளே பின்னணியில் இருந்து தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன.

புலிகளைப் பயங்கரவாதிகள், போர் வெறியர்கள், வன்செயல்களில் ஈடுபடுபவர்கள், நம்பமுடியாதவர்கள என்றெல்லாம் குற்றஞ்சாட்டி, அவர்களைச் சர்வதேச அரங்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவேண்டும் என்ற நோக்கில் தாம் செய்யும் காரியம், சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமாக அமையும் என்பதை இந்தப் பத்திரிகைகள் உணரவில்லைபோலும்.

இந்தப் பத்திரிகைகளின் ஓயாத பிரசாரத்தில் எடுபட்டுத்தான் அமெரிக்க இராஜாங்கப் பிரதி அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜ், ஒஸ்லோ கூட்டத்தில் பேசுகையில் புலிகள் முக்கியமாக மூன்று விடயங்களைச் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

வன்செயல்களை முற்றாகக் கைவிடுவதாகப் புலிகள் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்பது முதலாவது கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, தனிநாடு கேட்பதை விட்டுவிட்டோம் என்று அவர்கள் பிரகடனப்படுத்த வேண்டும்.

இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை ஏற்று, அவற்றின் அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயாராக இருப்பதாக அவர்கள் அறிவிக்கவேண்டும்.

போரை நிறுத்திக்கொள்வது என்றும் வன்முறைகளில் ஈடுபடுவதில்லை என்றும் அரசும் புலிகளும் கடந்த பெப்ரவரி மாதம் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணங்கியுள்ளன. அதன்படி நடந்தும் வருகின்றன.

புலிகள் நாட்டைப் பிரிக்கக் கோரவில்லை. தனிநாடு - தமிழ் ஈழம் அல்ல அவர்கள் கோருவது. பாரம்பரையாகத் தமிழ்மக்கள் வாழ்ந்துவரும் தமிழ்த் தாயகத்தில சுய்நிர்ணய உரிமை அடிப்படையில் பூரண தன்னாட்சதான் கேட்கிறார்கள். இதை தாய்லாந்தில் நடைபெற்ற அரசு - புலிகள் குழுக்களின் பேச்சுக்களின்போது புலிகள் குழுத் தலைவரும் புலிகளின் அரசியல ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் சர்வதேச ஊடகவியலாளர்கள் மூலம் உலகம் முழுவதற்கும் தெட்டத்தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அரசுடன் புலிகள் பேசப்போவார்களா?

இவ்வளவுக்குப் பிறகும் அமெரிக்கப் பிரதிநிதி, சுமார் 40 நாடுகள் கலந்துகொண்ட சமாதான ஆதரவுக் கூட்டத்தில் வன்செயல்கள், தனிநாடு, இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை தொடர்பாக புலிகளிடம் உறுதிமொழி கேட்டிருக்கிறார.

இது வேண்டுமென்றே செய்த காரியமாக இருக்கலாம் என்ற சந்தேகம் பலருக்கும் எழுந்துள்ளது. பேச்சளவில் சமாதானத்துக்கு அமெரிக்கா ஆதரவு, செயலில் வேறு நிலைப்பாடா?

அமெரிக்கப் பிரதிநிதிக்கு அன்ரன் பாலசிங்கம் சரியான பதில் அளித்துவிட்டார். புலிகள்மீது அமெரிக்கா கொண்டுள்ள கருத்து தவறானது. அமெரிக்கப் பிரதிநிதியின் கோரிக்கை பொருத்தமற்றது என்று அவர் ஆணித்தரமாக விளக்கம் அளித்திருக்கிறார்.

அதற்குப் பிறகும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் இந்த விடயத்தைத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. நாய் வாலை நிமிர்த்தமுடியாதிருந்தது உண்மைதான்.

புலிகளின் தோற்றத்துக்கு முன்னரே இந்த நாட்டில் அரசுகள், அரச பயங்கரவாதத்தை ஆரம்பித்துவிட்டன.

1956இல் காலி முகத்திடலுக்கு குண்டர்களை அனுப்பி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்த தமிழ்த் தலைவர்களை அன்றைய அரசு தாக்கவில்லையா?

60களில் தமிழ்ப் பகுதிகளில் உரிமைகளுக்காகச் சத்தியாக்கிரகம் செய்த தமிழர்களை இராணுவத்தை ஏவிவிட்டு அடித்து, உதைத்து, மிதித்துக் கொடுமைப்படுத்தவில்லையா?

அப்போது ஆரம்பமான அரச பயங்கரவாதமும் வன்செயல்களும் வெவ்வேறு விதங்களில் தொடர்ந்தன. அதை எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை; அரசிடம் உறுதிமொழி கேட்கவில்லை. புலகளுக்கு ஒரு நியாயம் அரசுக்கு இன்னொரு நியாயமா?

# லண்டனில் இன்று மாவீரர் நாள் நிகழ்வு

- லண்டனிலிருந்து றோஜன் -

லண்டன்,நவ.30

தமிழீழ மாவீரர்களை நினைவுகூரும் தேசிய எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளன. லண்டன் அரீனா(Arena) மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மண்டபத்தினுள் தற்காலிகமாக மாவீரர் துயிலும் இல்லம் ஒன்று அமைக்கப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

ஈகச்சுடரேற்றல், அகவணக்கம், மலர்வணக்கம், எழுச்சி கானங்கள், சிறப்புரை, கவிதைகள், நடனம், நாட்டியநாடகம், அரங்கநிகழ்வு என பல நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. லண்டனில் வாழும் மாவீரர்களின் உறவினர்கள் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்வணக்கம் செய்வார்கள். அதன்பின்னர் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் மக்களும் மலர் வணக்கம் செய்வார்கள்.

இந்நிகழ்வில் பிரித்தானிய தமிழ் ஒன்றியத்தின் கலை பண்பாட்டுப்பிரிவால் உருவாக்கப்பட்டுள்ள 'சத்தியம் சாகாது' எனும் இசைத்தட்டு வெளியிடப்படும். பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலான தமிழ் வணிக நிறுவனங்கள், சேவைசார்ந்த அமைப்புகள் மற்றும் பயன்தரு தகவல்களை உள்ளடக்கிய 'முரசம் 2003' தகவல் களஞ்சியமும் பிரித்தானிய தமிழ் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டும்.

சிறப்புரையை பெரும்பாலும் வழமைபோல விடுதலைப புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் வரமுடியாமல் போகும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் சிறப்புரையாற்றுவார்.

லண்டன் தேசிய நினைவெழுச்சி நாளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் ஐக்கியராச்சியத்தின் பல பரகங்களிலும் இருந்து கூடுவார்கள் என எதிர்வு கூறப்படுகிறது. இதற்கெனப் பல பகுதிகளிலும் இருந்து வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ம)

## ஆட்சிக்கு வரும் கட்சிகள் தமிழர்களின் உரிமைகளைத் தர முன்வந்ததற்கு மாவீரர்களின் தியாகமே காரணம்

### பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் உரை

வலி.மேற்கு,நவ.30

மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரு கட்சிகளும் தமிழர்களின் உரிமைகளை மறுத்து வந்தன. அதே கட்சிகள் இன்று தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இதற்கு மாவீரர்களின் தியாகமே காரணம்.

- இவ்வாறு ஓய்வுபெற்ற அதிபர் வே.தம்பையா தெரிவித்தார். மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் கடந்த 26ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடினர்.

கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் பொ.காங்கேயநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரை மாவீரர்களின் பெற்றோர் மு.புஸ்பராசா, வ.சிவகணேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய வே.தம்பையா தெரிவித்ததாவது:-

எமது தலைவர்கள் அனைவரும் காலத்துக்குக் காலம் சிங்களத் தலைவர்களினால் ஏமாற்றப்பட்டனர். தமிழ்மக்களின் அஹிம்சை வழிப்போராட்டங்கள் அனைத்தும் சிங்கள மக்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இந்நிலையில் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன், தமிழர் போராட்டத்துக்குத் தலைமைதாங்கி இன்று உலக நாடுகள் அனைத்தும் தமிழர் பற்றிச் சந்திக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளார்.

இன்று தமிழ்மக்களின் உரிமைகளை வழங்கவேண்டும் என சிங்கள அரசுக்கு உலக நாடுகள் நிர்ப்பந்தத்தைக் கொடுப்பதற்குரிய வழியை ஏற்படுத்தியவர்கள் மாவீரர்கள்தான்.

தமிழன் உள்ளவரை இந்த மாவீரர்களின் நினைவுகள் உலகம் முழுவதும் நிலைத்து நிற்கும். மாவீரர்களின் இரத்தத்தினாலும், வியர்வையினாலும், தியாகத்தினாலும் இன்று இந்த சமாதானச் சூழல் உருவாகியுள்ளது.

மாவீரர்களை நாம் அனைவரும் எமது நெஞ்சத்தில் வைத்து துதிக்கவேண்டும் - என்று கூறினார்.

(ம-175)

## மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றப் பிரதேச ரீதியில் குழுக்கள்

### அரச அதிபர் அதிகாரிகளுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனளிக்கக்கூடிய உதவித்திட்டங்களை இனம்கண்டு நடைமுறைப்படுத்துவதற்கென மாவட்ட, பிரதேச, கிராமிய மட்ட ரீதியாக செயலணிக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

தேசிய நல்லிணக்க செயலணி யாழ்.அரச அதிபர் ஊடாக இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பிரதேச மட்ட புனர்வாழ்வு நல்லிணக்க குழுவில் பிரதேச செயலர், பிரதேசத்தில் உள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அப்பிரதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட - மீளக்குடியமர்ந்த சமூகப் பிரதிநிதிக்ள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

கிராமிய மட்டக் குழுவில் கிராம உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட - மீளக்குடியமர்ந்த மக்கள் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

இந்தக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்குமாறு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் சகல பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

(எ-180)

## மனித உரிமைகள் ஆர்வலர் ஒருவர் தென்னாபிரிக்காவிலிருந்து வருகை

யாழ்ப்பாணம்,நவ.30

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரான நீதிபதி அல்வி சச்(ALBIE SACHS) யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 11ஆம் திகதி வருகைதரவுள்ளார்.

அன்றையதினம் காலை வருகைதரவுள்ள இவர் பிற்பகல் 3மணிக்கு 'மாற்றமடைந்து வரும் நீதிநிர்வாகம்' எனும் தலைப்பில் கருத்தரங்கை நடத்தவுள்ளார். யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், மதகுருமார்கள் மற்றும் புத்திஜீவிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அடுத்த நாள் 12ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் 'போர்ச்சூழலுக்குப் பின்னர் மனித உரிமைகள்' எனும் தலைப்பிலும் கலந்துரையாடலொன்றில் அவர் பங்குபற்றவுள்ளார். இக்கலந்துரையாடலில் சகல தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்பு விடுத்துள்ளது.

(ம-10)

**நாளை**

கார்த்திகை 15
ஞாயிற்றுக்கிழமை
(01.12.2002)
திதி : துவாதசி
முன்னிரவு 08.09 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பிற்பகல் 4.03 வரை.
சுபநேரம் : 9.14 - 10.44
ராகுகாலம் : 4.44 - 6.14
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

மனிதனுக்கும் உரிமையுணர்ச்சி பிறவியிலே அமைகிறது. ஆனால் கட்டுப்பாட்டுணர்ச்சி பயிற்சியால்தான் அமைகிறது.

## முல்லைத்தீவில் சவுக்கு மரங்கள் நடுவதற்கு கடற்புலிகள் ஏற்பாடு

வடமராட்சி,நவ.30

முல்லைத்தீவுப் பகுதியில் கடற்புலிகளின் ஏற்பாட்டில் சவுக்குமரங்கள் வளர்க்கப்படவுள்ளன.

இப்பகுதியில் சவுக்கு மரங்கள் நடுவதற்கென சுமார் ஆயிரத்து 200 சவுக்கு மரக்கன்றுகள் முதற்கட்டமாக வடமராட்சி கிழக்கு மணற்காட்டிலிருந்து லொறிமூலம் அண்மையில் முல்லைத்தீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் இம்மரக்கன்றுகளை சேகரித்து முல்லைத்தீவுக்கு அனுப்பிவைத்தது. மாவீரர் தினத்தன்று முல்லைத்தீவில், இங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்ட சவுக்கு மரங்களில் ஒருதொகுதி நடப்பட்டன.

(ம-173)

## கிணற்றில் தவறி வீழ்ந்து இரு சிறுவர்கள் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.30

கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த இரண்டு சிறுவர்களின் சடலங்கள் கடந்த புதனன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

கொட்டடிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற பஞ்சலிங்கம் டயலியன் (வயது 9) என்ற சிறுவன் கிணற்றினுள் வழுக்கி வீழ்ந்து உயிரிழந்தான்.

மற்றைய சம்பவம் மண்கும்பானில் இடம்பெற்றுள்ளது. தனது இரண்டரை வயதுக் குழந்தைக்கு உணவூட்டிக்கொண்டிருந்த தாயார் குழந்தையை விட்டுவிட்டு அவசர வேலையாக வீட்டுக்குள் சென்ற சமயம் கிணற்றடிக்குச் சென்ற குழந்தை கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை அடுத்து சடலங்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

பெற்றோர் தமது குழந்தைகள் விடயத்தில் அசட்டையீனமாக இருப்பதே இத்தகைய சம்பவங்கள் இடம்பெற ஏதுவாகின்றன என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம-15-12)

# ENGLISH ACADEMY

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail - thangan672002@yahoo.com
T.P.: 021-222 2588

தரம் 6முதல் பல்கலை மற்றும் அலுவலர்கள் வரை ஒரே கூரையின்கீழ் மிகத் தரமான கல்வியை வழங்குகின்றது.

05.12.2002இல் ஆரம்பிக்கும் புதிய தவணைக்கு தரம் 6முதல் A/L வரையான புத்தக வகுப்புகளுக்கு (Text Books) புதிய அனுமதிகள் தற்போது நடப்பில் உள்ளது.

01.12.2002இல் புதிய இலக்கண வகுப்பு பிரிவு V ஆரம்பம். Sat and Sun 5p.m. (old)

புதிய அனுமதிக்கான பதிவுக் கட்டணம் 100/=
இலக்கணக் கற்கைநெறிக்கான முழுக்கட்டணம் 1000/=
புத்தக வகுப்பிற்கான வருடாந்தக் கட்டணம் 600/=

மேலதிக விவரங்களுக்கு: ஆசிரியர் K.T.Rajah (S.S.)

Director

Why fear, We are here (11035)



# பதவி வெற்றிடம்

மெதடிஸ்த திருச்சபையின்கீழ் இயங்கும் சிறுவர் இல்லத்திற்கு தகுதியான பாதுகாவலர் (Warden) கோரப்படுகின்றார்.

*தகுதி:* கிறிஸ்தவர், 35 வயதிற்கு மேற்பட்ட திருமணமான ஆண் அல்லது பெண், அறநெறி, தலைமைத்துவ ஆற்றல் உடைய வராகவும் G.C.E.A/L அல்லது அதற்குத் தகுதியான வேறு தகைமை உடையவராகவும் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 10.12.2002

தொடர்பு: முகாமையாளர்
மெதடிஸ்த சிறுவர் இல்லம்
No: 9, லொக்வூட் கவுஸ்,
வேம்படி றோட், யாழ்ப்பாணம். (11135)



# சர்வதேச ஊனமுற்றோர் தினவிழா - 2002

இடம்: ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
47/2, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 03-12-2002 செவ்வாய்க்கிழமை
காலை 9.30 மணி.

பிரதமவிருந்தினர்:
பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம்
பீடாதிபதி,
உயர்பட்ட கற்கைகள் பீடம்,
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

சகலரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(சி-25124) - செயலாளர்.


# ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 12 - 03 - 1915



விண்ணில் 10 - 12 - 2001

## திருமதி தம்பு நாகரத்தினம் தவபாக்கியம்

(திதி: 30.11.2002)

மண்ணை விட்டுச் சென்ற
மாண்புமிகு தெய்வமே!
மனதில் அணையாத ஜோதியே!
ஓராண்டு ஆனதம்மா!
ஓயவில்லை எம் துயர்!
ஆறவில்லை எம் காயம்!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'கமலா வாசம்',
14, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம். (11163)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பாலர் விளையாட்டுவிழா

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை, சனசமூக நிலையம் ஆகியவற்றின் கீழ் இயங்கும் கண்ணன் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சுன்னாகம் மின்சார சபை மின் அத்தியட்சகர் அ.நாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-152)


# வேலை ஆள்கள் தேவை

சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இரு இடங்களிலும் உள்ள டயலொக் போன் ஷொப்பிற்கு இரு பெண்களும் மற்றும் யாழ். நகரில் உள்ள செல்வம் ஸ்ரோர்ஸ்க்கு சிட்டை எழுதுநரும், விற்பனையாளரும் (ஆண்கள்) உடன் தேவை.

இருபாலாரினதும் வயதெல்லை (20-50).

தொடர்பு:

செல்வம் ஸ்ரோர்ஸ்

230, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P No. 222 3817


(சி-25135)



யாழ் குடாநாட்டின் வெப்பநிலை 32°C
சூரியக்கதிர்களின் தாக்கங்களிலிருந்து எம் பெண்களின் அழகும், வெண்மையும், பொலிவும் பாதுகாக்கப்பட பாவியுங்கள்



Freshia
அழகின் பரம ரகசியம்






JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191



க்லோகாட்
ஜம்போ பக்கட் ஒன்றுடன்
க்லோகாட் டூத் பிரஷ் ஒன்று

ரூ. 12/-ஐ சேமியுங்கள்




க்லோகாட் ஜம்போ
கொடுக்கும் பணத்தை விடப்
பெறுமதி வாய்ந்த குடும்பப் பக்கட்

க்லோகாட்

# எரிபொருள் நிரப்பு நிலையம் முல்லைத்தீவில் திறந்து வைப்பு

முள்ளியவளை,நவ.30

நண்டகாலமாக போர் அனர்த்தங்களுக்கு உள்ளாகி அழிவுற்று மீண்டும் புதுயிர்பெற்றுவரும் முல்லைத்தீவு நகரத்தில் பல வருடங்களின் பின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று கடந்த 26ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையத்தின் ஆரம்ப நிகழ்வுகள் சங்கத் தலைவர் சி.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றன. மங்கள விளக்கினை தலைமைப்பீட உதவி அரச அதிபர் இ.கிருஸ்ணபிள்ளை ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் விநாயகமும், கூட்டுறவுக் கொடியினை முல்லைமாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ.சிவமயமும் ஏற்றினார்கள்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தினை முலலை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார்.

தினசரி காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை சேவைபுரியும் இந்நிலையத்தினால் மக்கள் பலர் பயன்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

## உடுவிலில் நாளை நாவலர் விழா

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராசா நாவலர் நினைவுச் சிறப்புரை நிகழ்த்துவார்.

நாவலர் சபைத்தலைவர் சைவப் புலவர் வ.கந்தசாமி, சிவத்தொண்டர் நிலைய பொருளாளர் து.சிவஞானம், இளைப்பாறிய ஆசிரியர் ச.முத்தையா ஆகிய கௌரவ விருந்தினர்கள் இவ்விழாவின்போது பிரதம விருந்தினரால் கௌரவிக்கப்படுவர். மன்றத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாலர் கலைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளும் இந்த விழாவில் வைத்து வழங்கப்படும். (எ-152)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

கார்த்திகை மாத மூன்றாவது சோமவார தினமான நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பஜனைச் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள் தலைமை வகிப்பார்.

தீட்சைபெற விரும்புவோர் பஜனை சபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-28)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.30

பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் பரிசுத் தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை முதல்வர் செல்வி அ.கந்தையா தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் எம்.சின்னத்தம்பி பிரதம விருந்தினராக் கலந்துகொள்ளவுள்ளார்.(ம-ரி)

★ ★ ★

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி மின் அத்தியட்சகர் த.செல்வச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி இ.அருளானந்தம் வழங்குவார். (எ-5)

★ ★ ★

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி சிவபாதசுந்தர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலலூரி அதிபர் வே.சிவசிதம்பரம தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ்.யோகராசா கலந்துகொள்வார். (எ-70)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.29

உடுப்பிட்டி சைவப்பிகாச வித்தியாசாலையின் பெற்றோர்தின விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் மா.மெய்யழகன் தலைமையில பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-ரி)

## அடுத்த வருடத்தில் பாடசாலை ஆரம்பமாகும் திகதி அறிவிப்பு

வலிகாமம் தெற்கு,நவ.30

அரசாங்க பாடசாலைகள் அனைத்தும் அடுத்த வருட முதலாம் தவணைக்காக ஜனவரி மாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் பாடசாலைகள் ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை - எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை டிசெம்பர் 13ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (எ-12-152)

# திருமலையில் மாவீரர்கள் உருவப் படங்களுக்கு மலர்மாலைகள் சூட்டி, ஈகச்சுடரேற்றி அஞ்சலி

திருகோணமலை,நவ.30

மாவீரர் தின நிகழ்வுகள் கடந்த புதனன்று திருகோணமலையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றன. காலை நிகழ்வுகள் சட்டத்தரணி கா.சிவபாலன் தலைமையில் இடம்பெற்றன.

முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கரின் உருவப்படத்துக்கு கரும்புலி மேஜர் சிவசுந்தரின் தாயார் திருமதி சி.ரோகிணி அம்மா ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

பொது ஈகச்சுடரினை மேஜர் பிரேமச்சந்திரனின் தாயார் திருமதி அழகையா சந்தானலஷ்மி ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை திருகோணமலை மாவட்ட தளபதிகளில் ஒருவரான கடலரசன் ஏற்றி வைத்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் முதல் மாவீரரான லெப்.சீலனின் உருவப்படத்துக்கு மாவீரர் நெப்போலியனின் சகோதரர் ஜெபதாஸ் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை சாத்தினார்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து வருகை தந்திருந்தோர் மலரஞ்சலி செலுத்தினர். 'அன்பு இல்ல' தந்தை சுந்தரலிங்கம் தலைமையில் இல்ல மாணவிகள் பஜனை பாடினர். பாடசாலை மாணவ, மாணவிகள், பொது மக்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாவட்டத்தைச் சேர்ந்த 50பெண் போராளிகள் உட்பட 1,479 மாவீரர்களின் உருவப் படங்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. சிவன்கோயில் பகுதியைச் சேர்ந்த 26 பேரின் உருவப் படங்கள் பிரத்தியேகமாக சிவன் கோயிலுக்கு அருகில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஜ-12)

எங்கள் கிராமத்தின் இந்தக் கோலங்கள்

# நாட்டுக்குத் தேவையான ஒரு நல்ல நாடகம்

குடிப்பழக்கம் ஒரு குடியை மட்டுமல்ல, ஒரு கிராமத்தையும் ஒரு சமூகத்தையும் கெடுக்கும் என்ற செய்தியை அழுத்தமாகத் தெரிவிக்கும் ஒரு நாடகம் சமீபத்தில் நல்லூர் பரியாக்கோப் ஆலயம் சார்ந்த இளைஞர்களால் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அரங்கில் மேடையேற்றப்பட்டது.

ஒரு மணிநேரம் நடந்த இந்த நாடகத்தில் எல்லாமே சிந்தனையைத் தூண்டும் காட்சிகளும் கருத்துக்களும். கதாசிரியர், இயக்குநர், கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை இந்த சிறு நாடகத்தில் பல நவீன உத்திகளைக் கையாண்டிருக்கிறார். இரு தோழிகள், ஒருத்தி பாடகி மற்றவர் ஆடல் பயிற்றுவிப்பவர், ஒரு கதைப் புத்தகத்தைப் படித்தவாறு ஆடல் பாடலுடன் நாடகத்தை நகர்த்துவது, நேரத்திற்கு உயிரூட்டுகிறது. காட்சிகளிடையே தாமதம் இல்லை. ஏனெனில், ஏழு களங்களில் நடைபெறும் நிகழ்வுகள் ஒரே மேடையில் அங்கும் இங்குமாக நடைபெறுகின்றன. இது நல்ல உத்தி. காலங்களின் இடைவெளிகூட ஒரே காட்சியமைப்பில். உதாரணமாக பகவான் யேசு தோன்றி, அவரின் அற்புதங்களும் அவரது தெய்வீக அருளும் காட்டப்படுகின்றன. ஓர் ஆத்மீக பின்னணியில் சீர்திருத்தக் கருத்தைப் பிணைத்தது அதற்கு வலுவூட்டுவதாகவுள்ளது.

தகப்பனின் குடிவெறிப் பழக்கத்தால் ஜனகன் என்ற பையனின் கல்விப் பாதிப்பு, அதைச் சீராக்கும் ஆசிரியர் ஜெயசிங்கம், சிந்தனையும அமைதியான பேச்சும் கொண்ட மூத்தவர் முத்துத்தம்பி (ஜனகனின் பேரன்) ஆகிய பாத்திரங்கள் நாடகத்தின் தூண்கள்.

குடிபோதையின் கிராம அழிவு காட்டப்படுகிறது. பின்னணியிலும், மேடையிலும், ஆடலிலும், பாடல்களிலும் ஒருவரின் இறப்பு, அதனால் ஒரு விதவை ஓர் அநாதை, கை இழந்த ஒருவர்; ஆஸ்பத்திரியில் வெட்டுக் காயங்களுடன் பலர்.

இப்படியாக, கிரமமக்கள் நோயாளிகளாகின்றார்கள். கிராமம் ஆஸ்பத்திரியாகின்றது.

கிராமத்தின் இந்த நோயைத் தீவிரமாக ஒழித்து ஒரு வழிகாட்டுவதற்கு அந்தக் கிராமத்தின் வாசிகசாலை நிர்வாக இளைஞர்கள் விழித்துக்கொண்டார்கள். ஆகவே, இனி கிராமத்தின் கோலங்கள் அழகும் அமைதியும் பெறும்!

எனது அனுபவம்படி குடிகார பாத்திரங்கள் எவ்வளவுதான் இயக்குநர் கூறினாலும் 'ஓவராக' மிதம் மிஞ்சி நடிக்கும் பழக்கம் உண்டு. இந்த நாடகமும் அதற்குத் தப்பவில்லை. இனி, நாடக பாத்திரங்களுக்குப் பொதுவான பெயர்களை வைத்த நாடகாசிரியர் கசிப்பும் கள்ளச்சாராயமும் வடித்து விற்கும் சமூக கிராம விரோதிக்கு சண்முகம் என்ற ஒரு மதம் சார்ந்த பெயர் வைப்பதைத் தவிர்த்து இருக்கலாம். உண்மையில் மனம் எண்ணாமல் நடந்த தவறு இது. ஆனால், குடிகொடுத்து, குடிகெடுக்கும் ஒருவனைக் குறிப்பதற்குத் தொடர்ந்து அந்தப் பெயர் உபயோகிக்கப்படும் ஆபத்து உண்டு. வீட்டு வேலைக்காரர் என்றால் பண்டா, மெனிக்கா, வள்ளி என்று இருந்தது நாம் அறிந்ததே. அதுபோல, சிறந்த ஒரு நாடகம், சமய பேதம் இன்றி அனைவரும், குறிப்பாக எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளும் பார்க்கவேண்டியது.

நந்தி

நாடக விமர்சனம்

# மக்கள் முகம்



வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சொ.அமிர்தலிங்கம் கடந்த 14ஆம் திகதி முதல் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், முதலில் அநுராதபுரம் விவேகாநந்தா மாகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய பின்னர், 1971இல் இலங்கை நிர்வாக சேவையில் தெரிவுசெய்யப்பட்டு வவுனியா மாவட்டத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதுக்குடியிருப்புப் பிரிவின் காரியாதிகாரியாக நியமனமானார்.

1975இல் நெடுந்தீவின் உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்று பல அபிவிருத்திப் பணிகளைப் புரிந்துள்ளார். நெடுந்தீவின் வெல்லைக் கிராமத்தை உப உணவு உற்பத்தித் திட்டத்தின்மூலம் விருத்தியுறச் செய்தமையால், அக்கிராமம் இன்று 'அமிர்தபுரம்' என வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. நானாட்டான் உதவி அரசாங்க அதிபராக விளங்கியபோது பெரியகுஞ்சுக்குளம், நறுவிலிக்குளம் ஆகிய இரு மாதிரிக் கிரர்மங்களைத் தோற்றுவித்தார்.

1984ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தை ஸ்தாபித்து புதிய மாவட்ட செயலகத்தை உருவாக்கியவர்களில் அமிர்தலிங்கம் முக்கியமானவர். பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராகவும் இவர் கடமைபுரிந்தார்.

1992இல் முதன் முதலாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட வவுனியா பிரதேச செயலாளராகப் பொறுப்பேற்றார். 1995இல் வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சுக்கு மேலதிகச் செயலாளராக நியமனம் பெற்றுப் பின்னர் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகப் பணிபுரிந்து, மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

☆ ☆ ☆



பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றிய சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் (சிவ.மகாலிங்கம்) இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர். யாழ்.இந்துக் கல்லூரி உட்பட பல்வேறு பிரபல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், 25.09.1991 முதல் ஆசிரியர் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பதவியேற்றுத் தொடர்ந்து கடமையாற்றினார்.

குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், சிறந்த சமயப் பணியாளரும், சொற்பொழிவாளரும், நூலாசிரியருமாவார். 'திருமந்திரவாதி', 'திருமுறைச் சொல்வள்ளல்' ஆகிய கௌரவப் பட்டங்களையும் இவர் பெற்றுள்ளார்.

☆ ☆ ☆




கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் கல்விபயின்றுவரும் செல்வி வாலாம்பிகை திருலோகசிங்கம் சென்றெய் - சிபா என்ற ஜப்பானிய அஞ்சல் சேவையாளர் ஒன்றியத்தினால் வழங்கப்படும் அஞ்சல் தொலைத்தொடர்பு சங்க அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி புலமைப்பரிசுக்குரிய சான்றிதழ் கொழும்பு பிரான்ஸ் ஏசியன் ஹொட்டலில் கடந்த 5ஆம் திகதி காலை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து மக்கள் தொடர்பு அமைச்சர் கௌரவ இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வழங்கிக் கௌரவித்தார்.

இவர் யாழ்.கைதடியைச் சேர்ந்த பிரபல சோதிட வல்லுநரும், வசாவிளான் தபால் நிலைய அதிபருமான ச.திருலோகசிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி ஆவார். (எ)

☆ ☆ ☆



பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த குமாரசாமி வரதராசா யாழ்.நிர்வாக மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு, 16.09.2002இல் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயப் பரிபாலன சபையின் பொருலாளராகவும், நாவலர் சனசமூக நிலையத்தின் செயலாளராகவும், விவசாய சம்மேளனத்தின் தலைவராகவும், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கக்கிளை இல.8 இன் தலைவராகவும் இருந்துவருவதோடு, பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் பிரான்பற்று அ.மி.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (எ-29)

☆ ☆ ☆



கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த முதலித்தம்பி சேதுகாவலர் இராசையா இவ்வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி நொத்தாரிசாகக் கடமைபுரியத் தகுதி பெற்றுள்ளார்.

இவர் பொது எழுதுநர் சேவையில் 30 ஆண்டுகள் சேவையாற்றிய பின்னர் அச்சேவையின் தரம் Iஇல் இருந்துஓய்வு பெற்றார்.

பொதுச் சேவைகளில் ஈடுபாடுடைய இவர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் பொருளாளராகவும் கடமைபுரிகிறார். (எ)

☆ ☆ ☆



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஒட்டுண்ணியியல் விரிவுரையாளர் இரத்தினசபாபதி இராஜராஜேஸ்வரன் ஒட்டுண்ணியியல் துறையில் முதுகத்துவமாணி (M.Phil) பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்.மருத்துவபீட முன்னாள் சமுதாய மருத்துவத் துறைத் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரத்தின் வழிகாட்டலில் 'யாழ்.குடாநாட்டில் கொக்கிப்புழுத் தொற்று' (HOOK-WORM INFECTION IN JAFFNA PENINSULA) பற்றிய ஆய்வு, முன்னாள் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்களினதும் மேற்பார்வையில் பூரணப்படுத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரை யாழ்.பல்கலைக் கழகத்தில் சமர்பபிக்கப்பட்டதையடுத்து இந்த M.Phil பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.வண்ணார்பண்ணை சிவலிங்கப்புலியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் கந்தப்பசேகரம் இரத்தினசபாபதியின் சிரேஷ்ட புதல்வர் ஆவார். (எ)

☆ ☆ ☆

உ



நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை - 2003

மேற்படி கோவிலுக்கு 2003ஆம் ஆண்டிற்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமை உள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை ***"பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"*** என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தொராம் திகதி (31.12.2002) மாலை 5.00மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாகச் ***"செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"*** என்ற முகவரியிட்டு கடிதம் மூலம் அனுப்புமாறு அல்லது கோவில் அறங்காவலர் சபை காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:**

1. அ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்
   ஆ) இந்து மதத்தை சேர்ந்தவராகவும்
   இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநராகவும்
   ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்க தகுதியுடையவர், ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்.
2. அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்திய பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின்

   *அல்லது*

   ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்த ஒரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2(அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/=) செலுத்தலாம். அத்தகைமை அற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) இன்படி.

   இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா 50/-(ஐம்பது) ***"பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"*** என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல்வேண்டும். அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும் இக்கோயிலில் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக்கோவிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு:- விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதிவான், இந்துமதகுரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்க பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ரூபா 5/-செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தை கோவில் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.*

அன்னையின் சேவையில்
**கனக.உருத்திரகுமாரன் B.A.**
கௌரவ செயலாளர்
அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

30-11-2002 (C-25098)

---

# JAFFNA COLLEGE VADDUKODDAI

## POST OF PRINCIPAL

Applications are invited from suitable Candidates to be appointed to the post of Principal, Jaffna College, Vaddukoddai.

**Applicants should conform to the following requirements.**

▲ Ideal Candidate will be a person with high academic achievement possessing post graduate qualification.
Applicants having a P.h.D will have an added advantage.

▲ Should be a Protestant Christian having close relationship with the Jaffna Diocese of the Church of South India.

▲ Should possess the ability, personality and calibre to command the respect of the community.

▲ Should possess the quality of leadership.

▲ Should be of good health.

▲ Applicants should be below the age of 50 years on the 1st January 2003.

Preference will be given to Candidates having teaching/ administrative experience.

**Salary will be negotiable.**

An official residence within the school premise will be provided.

Applications should be forwarded by registered post to the Chairman selection Committee of the Board of Directors of Jaffna College along with copies of certificates to reach within six weeks from the date of this notice, to the following address.

**The Chairman Selection Committee**
**of the Board Directors of Jaffna College,**
**39, Fussells Lane,**
**Colombo - 06,**
**Sri Lanka.**

(C/25121)

---

உ



சாமியே சரணம் ஐயப்பா!

**அகில இலங்கை சபரிகிரி ஸ்ரீ ஐயப்பசுவாமி பீடம்**
**கட்டுவன், கரணட்க்குளம்**

## திருவருள்மிகு ஸ்ரீ ஐயப்பசுவாமி திருக்கோயில்

**ஐயப்பன் அடியார்களே!**

மேற்படி ஆலயத்தில் நாளை (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணிவரை ஐயப்பசுவாமிக்கு விசேட படி பூஜை, பஜனை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. அனைத்து ஐயப்பன் அடியார்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சாமியே சரணம் ஐயப்பா!

**சிவ.அருணாசலக் குருசுவாமி**
**ஐயப்பதாசன்.**

(C/25139)

---

# பதவி வெற்றிடம்

## லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை

எமது தொழிற்சாலைக்கு சாரதி, தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

★ தொழிலாளர்கள் (தொழிற்சாலைக்கு)

★ சாரதி - அனுமதிப்பத்திரத்துடன் (உழவு இயந்திரம்)

காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணி அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். *T.P: 0777 110600*

ஜீ.ரீ.சற் (G.T.Z) மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்புச் செய்யப்படும் வீட்டுத்திட்டங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றுக்குப் பயன்படும்.

சீமெந்துக் கூரை ஓடுகள் | முகட்டோடுகள்

மற்றும்

இயந்திரங்கள்மூலம் தரமாகத் தயாரிக்கப்பட்ட சீமெந்துக் கொங்கிறீட் கல் வெவ்வேறு அளவுப் பிரமாணங்களில் விற்பனைக்கு உண்டு.

**தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்**

கூரை ஓட்டுத் தயாரிப்பில் புதிய பரிணாமத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம்.

**LOGES SHEET INDUSTRIES INUVIL**

**MICRO CONCRETE ROOFING SHEET(L.M.C.R.S)**

பரராசசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்.

(11180)

---

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா அரியரத்தினம்

**(இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்)**

அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா அரியரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி செல்லம்மா அரியரத்தினம் அவர்களது கணவரும், காலஞ்சென்ற ஈஸ்வரதாசன் (ஆசிரியர்) மற்றும் ஈஸ்வரதேவி, ஈஸ்வரமோகன் (லண்டன்), ருகேஸ்வரன் (லண்டன்), கோகுலேஸ்வரன் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), தயாரஞ்சினி (லண்டன்), சரோஜினிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சகலகலாவல்லி, நடராசா (அதிபர், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), தங்கலக்ஸ்மி (லண்டன்), தமயந்தி (லண்டன்), சிவபாகராசா (லண்டன்), இரமேஸ்வரன் (லண்டன்), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சாலினி, யாழினி, இளங்குமரன், தரன் (லண்டன்), அரன் (லண்டன்), ரமியா (லண்டன்), நித்தியா (லண்டன்), தர்சினி (லண்டன்), சயந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஈஸ்வரம்'*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

தகவல்:
க.நடராசா (மருமகன்),
அ.உதயகுமார் (மகன்).

(C/25130)

---

### திருமதி

## சின்னப்பு பொன்னுத்துரை இராசம்மா

மிருசுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை இராசம்மா 26-11-2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காலேஸ்வரி மற்றும் கணேஷ் (சவூதி), காலஞ்சென்ற நடேசு மற்றும் பத்மநாதன் (கட்டார்), சரஸ்வதி, பாலசிங்கம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நீக்கிலஸ், இராசமலர், சரஸ்வதி, நடேசு, புஸ்பா, கந்தசாமி, விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-11-2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் கேவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் தெற்கு,*
*மிருசுவில்.*

தகவல்:
பொ.பாலசிங்கம் (மகன்).

(C/1171)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| புத. | சூரி. கேது | செவ். வெள். | |

# இந்த வார இராசி பலன்

## 01.12.2002 ~ 07.12.2002

**மாற்றம்:**

01.12.2002 சித்திரை துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.

சமாதானப் பேச்சுகள் தொடரும். இறுக்கமான நிலை தோன்றும். ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்கவேண்டிய சூழ்நிலை தோன்றும். தெற்கே எதிர்ப்புணர்வு தொடரும். அரசியலில் மாற்றங்கள் சகஜம். இந்தியாவின் பங்களிப்பு முக்கிய இடம்பெறும். காலத்தின் சூழ்நிலையில் கருத்துக்கள் மாறலாம். ஒரு வடிவம் - இரு வடிவமாகலாம். ஆனால், இலட்சியம் ஒன்றாகத்தான் இருக்கும்.

இந்தியாவில் தீவிரவாதச் செயல்கள் இடம்பெறும். வடக்கே நெருக்கடி தோன்றும். மத்திய கிழக்கு நாடுகளில் பெருளாதாரத்துறைகள் பாதிக்கப்படக்கூடிய யுத்த நடவடிக்கைகளை மேற்கு நாடுகள் திட்டமிட்டு செயற்படுத்தும். இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் தாழமுக்கம் - மழையும் - வடமேற்கு நாடுகளில் பனியின் உறைவுகளால் சேதங்களும் ஏற்பட இடம் உண்டு. அத்திலாந்திக் கடல் நாடுகளிலும் காலநிலை சீரின்மையால் பல கஷ்டங்கள் தோன்ற இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

நாட்டிற்கும், வீட்டிற்கும் செலவு செய்ய பணம் மிகமுக்கியமானது. பணமற்றவன் பிணம் போன்றவன். எந்தச் செயற்பாடுகளும் செய்யமுடியாது. தொழில் பீடத்திலும் பொருள் நிலையிலும் பல மாற்றங்கள் ஏற்படும் காலம் இதுவாகும். அரசாலும், அரசியற்கட்சிகளாலும் இலாபங்கள் கிடைக்கும். சிலருக்கு அடிக்கடி இடமாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். எதிரிகள் பயப்படுவார்கள். அடி வயிற்று நோ, வாய்வுத் தொல்லை, அடிக்கடி களைப்பு என்பன ஏற்படும். குருத்துறை, நீதித்துறை, கோயில் பராமரிப்பு, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி.*

### இடபம்

நாட்டில் சமாதானம் மலருமா? உங்கள் சாத்திரம் என்ன சொல்லுகின்றது எனப் பலர் கேட்கிறார்கள். சமாதானம் மலரும் காலங்கள் வருஷமாகும்; தமிழர்களுக்கு முழு உரிமையும் சுயநிர்ணயமும் கிடைக்கும். அவசரப்பட்டு காரியம் ஆகாது. தொழில் ஸ்தானத்தில் அவசரப்படாதீர்கள். அதனால், வீண் சிரமங்கள், ஐயங்கள் ஏற்பட இடமுண்டு. வீடு - வாகனச்செலவு அதிகரிக்கும். தொண்டைநோ, சலவருத்தம், ஈரல்வருத்தம் போன்றன வரும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருக்கவும். கணனித்துறை, ரி.வி., டெக், சினிமா, இயந்திரத்துறை, ஹோட்டல்துறை, வங்கித்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### மிதுனம்

பாடுபட்ட நிலத்தின் பயிரை நடு நிசி நேரம் பார்த்து திட்டமிட்டு அபகரிக்கும் ஒரு கூட்டம் எப்பொழுதும் இருந்துகொண்டுதான் இருக்கும். தொழில்ஸ்தானத்தில் அவசரப்படக் கூடாது செயற்படவும். பணவரவு, புதிய நண்பர்களின் உதவிகள் ஏற்பட இடமுண்டு. இடமாற்றங்கள், பொருளவரவு, சகோதரர்களுக்கு சிறப்புக்கள் என்பன கிடைக்கும். வயிற்றுநோ, பித்தக்கிறுகிறுப்பு, களைப்பு, காய்ச்சல் என்பனவரும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். சித்திகள் கிடைக்கும். பலசரக்கு வியாபாரம், குருத்துறை, சட்டத்துறை, மருந்துத் துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி(மத்தியானம்).*

### கடகம்

பொங்கியவனிலும் பார்க்க தண்டியவன் பலவானாகும் காலம் இது. ஏனெனில், இப்பொழுது பல பணக்காரர்கள் தண்டித்தான் பிரகாசித்து வருகின்றார்கள். தொழில்ஸ்தானத்தில் பல பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். தூரதேச செய்திகள் வரும். தாய்வழியினருடன் வாக்குக் கலகம், எதிரிகளால் தொல்லை, பணச்செலவு அதிகரிப்பு என்பன ஏற்படும். கை,கால் விறைப்பு, மனப்பயம் என்பன வரும். மாணவர்களுக்குச் சித்திகள் கிடைக்கும். பாதுகாப்புத் துறை, மின்சாரத்துறை, தோட்டத் துறை, குருத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:வியாழன்,சனி.*

### சிங்கம்

வசதிபடைத்தவன் புத்தரை போன்று உலகபோகத்தை வெறுத்து யோகியாகி ஓடினால் அர்த்தமுண்டு. ஏழை விரதம் இருப்பதுவும், சாமி ஆவதிலும் அர்த்தமற்றது. எந்த வசதிகள் வந்தாலும் தொழில்ஸ்தானத்தில் அமைதியாக செயற்பாடுகளைச் செய்வீகள். சகோதரங்களுக்கு சாதகமான காலமாகும். புதிய நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். தூரதேசச செய்தி மகிழ்ச்சிதரும். நாரிநோ, கண கூச்சம், பதற்றநிலை, கால்வருத்தம் என்பன வரும். மாணவர்களுக்கு புதிய சித்திகள் கிடைக்கும். குருத்துறை, நீதித்துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிஷ்டநாளகள: திங்கள், வியாழன், சனி.*

### கன்னி

உடல் வாழ்க்கை இவ்வுலகில் மட்டும் தொடரும். ஆனால் மன வாழ்கை ஆத்மபலத்தை பொறுத்து, பாவ புண்ணியத்தை பொறுத்து பல பிறவிவரையும் தொடரும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். தூரதேசத்தில் இருந்து நன்மையான செய்திகள்வரும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு பலத்த போராட்ட சூழ்நிலை உருவாகும். ஆனால், நண்பர்களின் ஆதரவு பலமாற்றங்கள் - அமைதியை தரும். பொருளில் கவனமாக இருக்கவும். சளித்தொல்லை, கைகால் உளைவு, தொண்டை நோ, கண்நோ என்பன கொடுக்கும். குருத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### துலாம்

இடத்துக்கிடம் மாறுபட்ட கருத்துக்களும் மாறுபட்ட மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். உங்கள் தொழில்ஸ்தானத்தில் பலமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. பொருள் வரவு இருக்கும். செய்திகளால் மனக் கலக்கம் ஏற்பட இடமுண்டு. பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். அரசியல் அல்லது அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வீடு-வாகன சுகம் கிடைக்கும். தாயாருடன் அல்லது தாய்வழியினருடன் சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். எண்ணெய்த்துறை, பாதுகாப்புத் துறை, சட்டத்துறை போன்றவர்களுக்குப் பல நன்மைகளும் குருத் துறையினருக்கு விட்டுவிட்டு வருவாயும் ஏற்படும்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### விருச்சிகம்

நாட்டின் காணி, வீட்டின் காணிக்காக பலத்த போராட்டம். இதில் எவர் வெற்றி தோல்வி காண்கின்றார்களோ அதுவே அவர்களின் முடிவாகும். இது விதியின் நிர்ணயமாகும். எவரும் தப்ப முடியாது. தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை வரும். இடமாற்றங்கள் நல்லதல்ல. கருத்துவேற்றுமை, குடும்பத்திலும் வந்து மனச்சஞ்சலம் கொடுக்கலாம். கிருமித்தாக்கம், சலப்பிரச்சினை, மூக்கு, தொண்டை வருத்தங்கள் கொடுக்கும். சளியாலும் உஷ்ண குளிராலும் வருந்த இடமுண்டு. மாணவர்களுக்கு பரீட்சையில் நற்பலன்கள் ஏற்படும். மருநதுத்துறை, இரும்புத் துறை, தொழில்நுட்பத்துறை, பாதுகாப்புத்துறை, சாய்ப்புச்சாமன் வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### தனுசு

எந்தக் கெட்டித்தனக்காரரையும் விதிதப்பவிடாது. தன்காரியத்தைச் செயற்படுத்தும் விதிகாரரான சனீஸ்வரனும், ஆயுள்காரனாக இருந்து ஜீவராசிகளைத் தண்டித்தபடி இருப்பான். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்கு நனமைகள் வரும். பொருள்கள் தவறுதல், இடமாற்றங்கள்,புதிய நண்பர்கள் உதவுதல், புதிய திட்டங்களால் பல உருவாக்கங்கள் என்பன இடம்பெறும். கால் உளைவு, பனியால் சளித் தொல்லை, காய்ச்சல், நாரிநோ என்பன ஏற்படும். சட்டத்துறை, பலசரக்கு வியாபாரம், குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர் களுக்கு பல நன்மைகள் ஏற்பட இடம் உண்டு.

*அதிஷடநாள்கள்:ஞாயிறு, திங்கள், வியாழன், சனி*

### மகரம்

நடந்து வந்த பாதையைத் திரும்பப் பாாக்கும்பொழுது எத்தனையோ தவறுகள் தெரிவதுடன் புதிய பாதையின் வழியும் தெரியும். தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்கள் உருவாகும். தாயாருடன் அல்லது சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். அரசியல் செல்வாக்கு புதிய திட்டங்களால் நன்மைகள் தோன்ற இடம் உண்டு. இடமாற்றங்கள் சகஜம். புதிய முயற்சி, மந்தநிலை கொடுக்கும். கால் நோ, சளித்தொல்லை, பித்தரோகம் என்பன வரும். மாணவர்களுக்கு கருத்து வேற்றுமை ஏற்பட இடமுண்டு. எண்ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, நீதித்துறை, குருத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிஷடநாள்:- ஞாயிறு, திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

உலகம் மிக வேகமாக மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. நாம் பின் நோக்கியபடி மெதுவாக இயங்குவது எமது பொருளாதார வலுவைப் பொறுத்தது. எனவே, தொழில்ஸ்தானத்தில் மிகுந்த கவனத்துடன் செயற்படுவீர்கள். சனீஸ்வரனின் தாக்கமுண்டு. பாதி வழியில் பரிதவிப்பு வரலாம். பொருள் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். மாணவர்களுக்கு எதிர் காலத் திட்டங்களால் நன்மைகள் அதிகரிக்கும். கால் வருத்தம், சளித்

## மகாதேவா ஜோதிடம்

தொல்லை, நாரிநோ,என்பன ஏற்படும். பிரயாணத்துறை, குருத்துறை, அரசியல்துறை போன்றவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிஷ்டநாள்:ஞாயிறு, திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

'எளியாரை வலியார் வருத்த - வலியாரை தெய்வம் வருத்தும்' என்பார்கள். எளியார் பொங்கினால் வலியார் மறைந்துவிடுவர். தொழில் ஸ்தானத்தில் சில வலுவான மேலாதிக்கம் உள்ளவர்களால் தொழில்நிலை பாதிப்பு அடைய இடமுண்டு. குடும்பத்தினரின் நன்மைக்காக ஓடியாடித் திரிவீர்கள் நண்பர்கள் கெடுதி செய்வர். தூரதேசச் செய்திகள் வரும். கால்வருத்தம், சளித்தொல்லை, பித்தரோகம் கொடுக்கும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மருத்துவத்துறை, பிரயாணத்துறை, கணனித்துறை, சங்கீதத்துறை, கடல் துறை போன்ற துறைகளுக்கு பல நன்மைகள் கொடுக்கும்.

*அதிஷ்டநாள்கள்:-ஞாயிறு, திங்கள், வியாழன், சனி.*

# தமிழனின் பண்டைய வீரம் மீண்டும் இப்போதுதான் பின்பற்றப்படுகின்றது

## வணிக முகாமைத்துவ பீடாதிபதி தெரிவிப்பு

புறநானூற்றில் வரும், தமிழர்களின் வீரத்தாய்மார்களின் மரபில் வந்தவர்களே இன்றைய மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். பண்டைய தமிழ் வீரம் இன்றைய காலகட்டத்தில் தான் மீண்டும் பாரம்பரியமாகப் பின் பற்றப்பட்டுவருகிறது. இப்பாரம்பரியத்தினால் தமிழரின் பெருமையை உலகெங்கும் அறியக்கூடியதாகவுள்ளது.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் தெரிவித்தார். வடமராட்சியில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நவிண்டில் தாமோதர வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பண்டையத் தமிழர் போரியல் வரலாற்றில் போர்க்களத்தில் மார்பில் அம்பு பாய்ந்து வீரமரணத்தைத் தழுவும் பிள்ளைகளையே தாய்மார் ஏற்றிப்போற்றுவார்கள். உடலின் புறமுதுகில் அம்பு பாய்ந்து மரணிப்பதை அன்றைய வீரத் தாய்மார்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதேபோல எமது மாவீரர்களும் நேருக்கு நேர் நின்று புறமுதுகு காட்டாது நெஞ்சுரத்துடன் போராடி வீரமரணத்தை தழுவி தமிழர் பாரம்பரிய வீரமரபினை காப்பாற்றியுள்ளார்கள்.

மாவீரர்களின் அர்ப்பணிப்பினால் தான் இன்று நாம் நிம்மதியாக, சந்தோஷமாக, சுதந்திரமாக எங்கும் செல்லவும், சென்று வரவும் முடிகிறது. மாவீரர்களின் செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும்.

படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது எமது மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள கல்லறைகளை உடைத்தார்கள். ஆனால் ஆனையிறவு முகாம் புலிகளால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டபோதிலும் ஆனையிறவில் உள்ள படைவீரர்களின் கல்லறைகள் இன்றும் உண்டு. முகாம் தாக்கி அழிக்கப்பட்ட போதும் இறந்தவர்களின் கல்லறைகளுக்கு நாம் மதிப்புக் கொடுத்துள்ளோம். அவை இன்னமும் அழிக்கப்படவில்லை. தென்பகுதியிலிருந்து வருவோர் அதனைப்பார்த்துச் செல்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழர்களின் பரம்பரைகளில் வந்த சோழராச்சியத்தின் கொடியும் புலிக் கொடிதான். தமிழர்களின் வீரத்தை எடுத்துக்காட்டுவதும் புலிக்கொடிதான். தமிழர் தாயகத்தின் நீண்ட தூர நோக்கத்தின் செயற்பாடுகளாக புலிக் கொடி மிளர்கிறது. தமிழர் தாயகத்தை வென்றெடுக்க, அதன் இலக்கை அடைய இராணுவக்கட்டமைப்பு, பொருண்மியம், கலை, பண்பாடு ஆகிய மூன்று அம்சங்களையும் ஒன்றோடொன்று இணைத்துச் செயற்படும் தன்மை மிக விவேகமானது இப்பணியைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இம்மூன்று கட்டமைப்புக்களுடன் மரபுவழிப் புலி, கடற்புலி, கரும்புலி ஆகியன இராணுவக் கட்டமைப்பிலிருந்து மூன்று கிளைகளாகப் பிரிந்து செயற்பட்டுவருவதும் எமது வெற்றிக்குக் காரணிகளாகும். புலிகள் மேற்கொண்ட இக்கட்டமைப்புக்கள் உறுதியாகவும் பலமாகவும் செயற்பட்டமையால்தான் இன்று உலக அரங்கில் உலக நாடுகளின் பிரதிநிதிகளுடன் நேருக்குநேர் பேசும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மாவீரர்களின் தியாகங்கள் இப்போது சிலருக்கு சரியாகப் புரியாது. காலப்போக்கில்தான் அவர்களின் பெறுமதியை மக்கள் முழுமையாக உணரக்கூடிய வாய்ப்பு ஏற்படும் - என்றார்.

போராளி குமுதினி பேசுகையில்:-

மாவீரர்களின் தியாகம் அளப்பரியது. மாவீரர்களின் செயற்பாட்டினால் தான் இன்றைய சமாதானச் சூழல் எம்மைத் தேடிவந்தது - என்றார்.(ம-173)

## உடுபுடைவைகள் அன்பளிப்பு

திருகோணமலைப் பகுதியில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலங்கை இந்து நலக் கூற்று இயக்க அனுசரணையுடன் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உடுபுடைவைகளை அண்மையில் வழங்கின. அத்துடன், திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கியதுடன் அங்குள்ள 'வார்ட்' ஒன்றுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களையும் வழங்கினர்.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உப தலைவர் சட்டத்தரணி கா.சிவபாலன் தலைமையில் 'ஞானசிரோன்மணி' இ.வடிவேலு, திருமலை சிவன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சுந்தரலிங்கம், சரசால்ல நுணாவில் சிதம்பரவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சிவசங்கரநாதன், பேரவை மகளிர் பிரிவுத் தலைவி திருமதி பத்மா உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-117)

## வலி.மேற்கில் ஒருங்கிணைப்பு கூட்டம்

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-175)

## மாணவ மாணவிகளே!

**உங்களுக்கொரு நற்செய்தி**

லாலா சோப், சன்சயின் சோப்பின் மேலுறைகள் 20 சேகரித்து அனுப்புவோருக்கு 80 பக்க அப்பியாசக் கொப்பியொன்று இனாம்.

உரிமையாளர்

**லாலா சோப் தொழிற்சாலை**

(C/25152) அச்சுவேலி.


## துயர் பகிர்கிறோம்



**செல்வி கலைவாணி திருநாவுக்கரசு**
(B.Com, M.L.I.S.Ph.D)
உதவி நூலகர் 1991 - 2001
யாழ். பல்கலைக்கழகம்

முன்னாள் உதவி நூலகர் கலாநிதி செல்வி தி.கலைவாணி அவர்கள் லண்டனில் மரணமடைந்த செய்திகேட்டு மீளாத் துயரில் மூழ்கியுள்ளோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(11207) - நூலக அலுவலர் கழகம், நூலகம், யாழ்.பல்கலைக்கழகம்

## துயர்பகிர்வு

எமது பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்
திருமதி தயாவதி அசோகன் அவர்களின் தந்தை

**கணபதிப்பிள்ளை பொன்னையா**
(எழுதுமட்டுவாழ் தெற்கு)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர் அனைவரது துயரிலும் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

*கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை, பளை.* (11498) அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## துயர்பகிர்வு

எமது சங்கத்தின் முகாமைப் பணிப்பாளர்
கு. சிறிகணநாதன் அவர்களின் தாயார்

**திருமதி குருநாதர் இரத்தினம்மா**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
- யாழ். மாவட்ட சித்தமருந்துகள் உ. வி. வை. சே. கூட்டுறவுச் சங்கம்.
கொக்குவில். (11210)

## அமைச்சர் மிலிந்த இந்தியா சென்றார்

ஒஸ்லோ கூட்டத்துக்கான இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவரான அமைச்சர் மிலிந்த மொறகொட, நேற்று இந்தியாவுக்குச் சென்றார்.

ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம், சமாதானப் பேச்சுக்கள் ஆகியவை குறித்து அவர் புதுடில்லியில் இந்தியத் தலைவர்களிடம் விளக்கிக்கூறுவார்.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கான பயிற்சிவகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் ஈச்சமோட்டை வீதியில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகளில் உதைபந்தாட்டத்தில் ஆர்வம் உள்ளவர்களையும் உதைபந்தாட்ட வீரர்களையும் தற்போது மத்தியஸ்தராகக் கடமையாற்றி தரம் உயர்த்தல் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ம-5)

## குடும்பவள துணைநிலையம் திறப்பு விழா

அகவொளி குடும்பவளத் துணைநிலையத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சென்யற்றிக்ஸ் வீதியில் உள்ள கட்டடத்தில் இயக்குநர் அருட்திரு.எஸ்.ஜே இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்த நிலையத்தைத் திறந்துவைப்பார்.

ஆயரின் ஆசியுரையைத் தொடர்ந்து அருட்திரு.போல்றொகான் அடிகளாரின் சிறப்புரை இடம்பெறும்.(எ-86)


## ஸ்ரார் கல்வி நிலையம்

சுன்னாகம் மல்லாகம்

**தரம் 5 முதல் தரம் 11வரை புதிய வகுப்புகள் ஆரம்பம் 01.12.2002**

☆ சுன்னாகத்தில் காலை 8.00 மணி
☆ மல்லாகத்தில் மாலை 3.00 மணி

(எமது அனுபவமான SUPER GRADE ஆசிரியர்கள் குழுவினால்)

(11196) - நிர்வாகம்



## விமானப்பயணிகளுக்கு

எக்ஸ்போ, லயன்எயர், செரண்டிப் ஆகிய மூன்று விமான சேவைகளின் பயணச்சீட்டுக்களையும் ஒரே இடத்தில் வழங்குபவர்கள்.

ஸ்ரான்லி வீதி, இல.212, மகாலட்சுமி கட்டடத்தில் அமைந்துள்ள **S.T.P. & CO** ஸ்தாபனம் என்பதை அறியத்தருகின்றோம்.

26.11.02 முதல் 31.12.02வரை லயன் எயர் காலை விமானப்பயணச் சீட்டுக்கள் 10% கழிவுடன் வழங்கப்படுகின்றது என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

C-25149 **S.T.P. & CO**


## ஆத்மாவின் கசிவுகள்

தாய் மண்ணில் 06 . 03 . 1962



அந்நிய மண்ணில் 27 . 11 . 2002

**செல்வி கலைவாணி திருநாவுக்கரசு**
(B.Com., M.L.I.S, Ph.D)
*உதவி நூலகர் 1991–2001 யாழ். பல்கலைக்கழகம்*

வாணி! கலைவாணி!
உனைக் கண்ட நாளில்
உன் அழகில், உன் குரலில்,
உன் சிரிப்பில் சிலிர்த்து நின்றோம்.
பழகிய நாள்களில்
உன் அறிவும் ஆளுமையும்
ஆற்றலும் கண்டு அதிசயித்தோம்.
காலத்தின் நெருக்கீடுகளில்
உன் நேர்மையும் துணிவும்
உறுதியும் உழைப்பும்
கண்டு பெருமிதமுற்றோம்.
இவை அனைத்தும் இன்று
அலகிலா விளையாட்டுடையான்
அடியிணையில்.....? ..... ??.....???
அன்னவளே, உந்தன் ஆத்ம சாந்திக்கு
இதயத்தால் இறைஞ்சுகின்றோம்.

நாம் உனக்கு என்ன உறவு

(11207) இராஜேஸ் கருணானந்தராஜா, ஸ்ரீ.அருளானந்தம், விமலா வேலுதாசன்

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24.04.1961 — அராஜகத்தின் பிடியில் 30.11.1989

**அமரர் மு.திருஞானசேகரம்**

*(பிரபல தமிழ் ஆசிரியரும், புத்தொழில் மாத சஞ்சிகை - ஆசிரியரும்)*
(திதி: 07.12.2002 திருதியை)

*நல்ல தமிழாசானாய்*
*தமிழுக்குப் புத்தொழில் படைத்தாய்*
*தமிழ்ப் பற்றும், விடுதலை உணர்வுங்கொண்ட - உன்னை*
*அராஜகத்தால் இழந்து தவிக்கின்றோம்.*
*இறைவன் உனக்கு ஆறுதல் தரும்.*

*அறிவொளி வீதி, ஓடை, புத்தூர்.* (11201) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி குருநாதன் இரத்தினம்மா**

அராலி தெற்கைச் சேர்ந்த திருமதி குருநாதன் இரத்தினம்மா அவர்கள் 29.11.2002 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா குருநாதன் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீ கணநாதன் (ஆயுள்வேத வைத்தியர் யா/மா/சி/ம/உ/வி/வை/சே/கூ/ சங்கம் முகாமைப் பணிப்பாளர்), ஜெகதீஸ்வரி ஆசிரியரின் பாசமிகு தாயாரும் திருமதி ஸ்ரீ கணநாதன் செல்வமலர் (கிளி) காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி இந்திரகுமார் பங்கையச்செல்வி, பேரருட்செல்வி, திருவருட்செல்வி, குகநாதன், சந்தசாமி இந்திர குமார் (கந்தசாமி அன் சன்ஸ், சங்கானை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு, அராலி.* (11205) தகவல்: (கு.ஸ்ரீகணநாதன் (மகன் - ஆயுள்வேத வைத்தியர்)

## ஊர்காவற்றுறைப் பிரதேச சபை சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2003

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளை 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி 09.12.2002
02. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 10.12.2002 ந.ப.12.00 மணிவரை. அன்றைய தினம் பி.ப.1.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளை கேள்விகள் சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கலாம்.
03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
04. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தலுக்கான அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படாதவை | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக்கூடியது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல.01 (மாத வாடகை ரூபா.150 அறவிடப்படும்) | 150/- | 2000/- | 75000/- |
| 02. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல.02 (மாத வாடகை ரூபா.150 அறவிடப்படும்) | 150/- | 2000/- | 65100/- |
| 03. | காரைநகர் பழைய சுவண்டி மீன்சந்தை | 200/- | 500/- | 15000/- |
| 04. | காரைநகர் வேம்படி மீன்சந்தை | 200/- | 500/- | 17000/- |

குறிப்பு கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப்பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 20% செலுத்துதல் வேண்டும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
29.11.2002 (T/25146)

திரு.நா. திருச்செல்வம்
உப தலைவர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

எலைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய கல்வியாண்டு 2003
தரம் 3 முதல் O/L வரை
அனைத்து வகுப்புக்களும்
ஆரம்பம்: 05.12.2002
வியாழன் காலை 8.00 மணி
-நிர்வாகி-


# ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.30

ஆசிரியர்சேவையில் பயிலுநர் ஆசிரியர்களை உள்வாங்குவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய் வதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூ ரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங் கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் தக் கலந்துரையாடலில் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கலந்துகொள்வார்.

பயிலுநர் ஆசிரியரின் பிரச்சினை தொடர்பாக சங்கம் இதுவரை எடுத்த நடவடிக்கைகள், எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அவர் விளக்கமளிப்பார். (ஓ-3)


## கலந்துரையாடல்

இடம்:- சிற்றி ஹோல் - (CITY HALL) யாழ்ப்பாணம்
காலம்:- நாளை (01.12.2002) ஞாயிறு மாலை 3.30 மணி
விடயம்:- வரவு செலவுத்திட்டம்
தலைவர்:- A.C. ஜோர்ஜ்
தொடக்க உரை:- திரு.வி.பி.சிவநாதன்
(தலைவர் பொருளியல் துறை, யா/பல்கலைக்கழகம்)
ஆர்வலர்கள் பங்குபற்றவும்.
(215) சர்வதேச மார்க்சிய குழு

## நீர்வேலி காமாட்சி அம்மன் கோவில்

மேற்படிகோவிலில் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருந்த மகாவிஷ்ணு (ஐம்பொன்) விக்கிரகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளது. இது பற்றிய தகவல் அறிந்திருந்தால் உடன் கோவில் நிர்வாகத்தின ருடன் தொடர்பு கொள்ளவும்
-நிர்வாகம்
(160)

## இலங்கை வங்கி யாழ். இரண்டாம் கிளை

02-12-2002 முதல்
வங்கிச் சேவைகளை கணனிமயப்படுத்துகின்றது.

யாழ். மேற்றரக்கிளை, திருநெல்வேலிக்கிளை ஆகியவற்றை அடுத்து கணனி வலைப்பின்னலில் இணைந்து கொள்கின்றது இலங்கை வங்கி யாழ்இரண்டாம் கிளை.

வாடிக்கையாளருக்கு மேலும் திருப்திகரமானதும் விரைவானதுமான சேவையை

இவ்வங்கி வழங்கும் என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
கணனியை இயக்கி முதலாவது வைப்பை
எமது
பிரதி பொதுமுகாமையாளர் (கிளைகளும் வங்கிஅபிவிருத்தியும்)
உயர் திரு.ரீ.எஸ்.ரணசிங்க
அவர்கள் பெற்றுக் கொண்டு
கணனிமய சேவையை ஆரம்பித்துவைப்பார். இவ்வைபவத்தில் வாடிக்கையாளர்களையும் எமது நலன் விரும்பிகளையும் கலந்து சிறப்பிக்கும்படி அன்போடு அழைக்கின்றோம்.

பிரதேச முகாமையாளர், யாழ்.பிரதேசம். (C-25159)
முகாமையாளர், யாழ்.இரண்டாம் கிளை, யாழ்ப்பாணம்.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

கல்வியாண்டு 2003 O/L தரம் 10,9,8,7,6

ஆரம்பம் 5.12.2002 9 மணி. சனி, ஞாயிறு வகுப்புகள் O/L, 10
ஆரம்பம் 7.12.2002 8 மணி. 1 மணி - 1 மணிவரை
மு... முறை நாள்களில் அனைத்து வகுப்புகள் காலை 9 மணி - 1 மணிவரை நடைபெறும்.
... து மாணவர்கள் (தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி) மற்றும் அனைத்து மாணவர்களும் இப்பிரிவில் அனுமதிக்கப்படுவர்.
..., ஞாயிறு வகுப்புக்கள் 3 பிரிவு மட்டுமே.
...ன்று தொடக்கம் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். (C/25143)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோமாஸ்கந்தப் பிள்ளை பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ ...
பாரம்பரிய ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். ...
கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? ... காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா?
... எல்லாப் பிரச்சினைகளுக்கும் ... மூலம் தீர்வு காணலாம்.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மணிசாமி - RTR
யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி
இல.01, பணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தியருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9மணிமுதல மாலை 4மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

## "அகவொளி" திறப்பு விழாவும் கருத்தரங்கும்

யாழ். செ...ப்றிக்ஸ் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட "அகவொளி" குடும்ப வழிகாட்டல் நிலையம் நாளை (01.12.2002) ஞாயிறு மாலை 3.30 மணிக்கு (இ.நே.) திறந்துவைக்கப்படும்.

திறந்துவைப்பவர்:-
பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம்.
(யாழ்.ஆயர்)

கருத்தரங்கின் தலைப்பும்பொருளும்:-
"மானுட சேர்க்கைவழி மந்திரமா? மருத்துவமா?
வழங்குபவர்:- அருட்திரு.யோவல் பெர்னாண்டோ (L.Ph)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அகவொளி
குடும்ப வழிகாட்டல் நிலையம்
செ.பற்றிக்ஸ் வீதி,யாழ்ப்பாணம் இயக்குநர். (C/1190)

## எமது புதிய வெளியீடு

நெப்போலியன் - வினிதா, கபாலி நடித்த
வாரண்ட்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ - சிந்து
உரும்பிராய் - சந்தி (C/25161)

## ஆரம்பம்

IBMS
JAFFNA
DBA & DIT
MS Office + SLCDL
30.11.2002
701, K.K.S. ROAD,
JAFFNA
T.P.3165
(C-25155)

## BARATHY கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

புதிய வகுப்புகள்
5 தொடக்கம் 11 வரை
ஆரம்பம் -1.12.2002
ஞாயிறு 9.00மணி
எமது தனித்துவமும்
அர்ப்பணிப்புமிக்க திறமையும் கொண்ட
ஆசிரியர் குழுவினால்

விஞ்ஞானம்
திரு. தேவா
திரு. பாலச்சந்திரன்
கணிதம்
திரு. S.சிவரூபன்
திரு. சிவா
தமிழ்
திரு. குகபரன்
திரு. தமிழ்மாறன்
ஆங்கிலம்
திரு. விஜயபாலஸ்கர்
திரு. ஹரிகரன்
சமூகக்கல்வி
திரு. ஜெகன்
தமிழ் இலக்கியம்
திரு. குகபரன்
சமயம்
திரு. தரன்
திரு. சிறி
வர்த்தகம்
திரு. லோகேஸ்வரன்
கணக்கீடு
திரு. நிரோஜனன்
(11156)

அனுமதியினை முன்கூட்டி பெற்றுக்கொள்ளவும்.
Note-இவ்வாசிரியர்கள் இப்பிர தேசத்தில் இந்நிறுவனத்தில் மட் டுமே தான் கற்பிக்கவுள்ளார்கள்.

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், அஜித், சிம்ரன் ... நடித்த
பூவே (சினிமா)
காட்சிகள்: 11.00, 2.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி
6.30 (புதிய நேரம்)

## ராஜா யாழ்ப்பாணம்.

3வது வாரம்
அஜித் (இரட்டை வேடங்களில்), மீனா நடித்த
வில்லன்
(சினிமா)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், மீனா நடித்த
சிட்டிசன்
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதிய நேரம்) (C/25157)

## முக்கிய அறிவித்தல்

இலங்கை வங்கி 2 ஆவது கிளை நடத்திய றன்-கினும் வாசனா (2000 -2001) மாபெரும் சீட்டிழுப்பில் பரிசு பெற்றும் இதுவரை அவற்றைப் பெறா தோர் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

பரிசுக்குரியவர்கள் வங்கியில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும். நேரில் சமுகமளிக்க முடியாதோர் தங்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிநிதியின் மூலமும் பரிசைப் பெற்றுக்கொள்ளலாம்.

காஸ் அடுப்புக்கள்
1) க.கனகரத்தினம்
41/9, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
சே/க. இல. 15737
2) ஆர்.ஜெகதீஸ்வரன்
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
சே/க. இல. 18308

துவிச்சக்கர வண்டிகள்
3) திருமதி வை.ஏகாம்பரதாசன்
இல. ஏ.வி. றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
சே/க. இல. 10093

தையல் இயந்திரம்
4) ச.கனகரத்தினம்,
'இராஜ வாசம்',
புங்குடுதீவு.
சே/ க. இல. 15135
5) வ.துரைராசன்
51, கொழும்புத்துறை றோட்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
சே/க. இல. 17884

தங்க நாணயப் பரிசில்
6) திருமதி காளியம்மா பரசுராமர்
352, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
சே/க. இல. 19706
(C/25157)


## கண்ணீர் அஞ்சலி

**இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை**
(முன்னாள் முகாமையாளர், S.V.M. நிறுவனம், நெல்லியடி)

எமது தாபனத்தின் நெல்லியடிக் கிளையின் முன்னாள் முகாமை யாளரான இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை அவர்கள் 28. 11. 2002 வியாழக் கிழமை நயினாதீவில் காலமாகிய செய்தியை அறிந்து நாம் அதிர்ச்சி யும் கவலையும் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
S.V.M
திறுவன உரிமையாளர்களும், ஊழியர்களும்.
(C-25156)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் திரு. K.சகாதேவன் அவர்களின்
அருமை மாமனார்
**இ.குலசேகரம்**
அவர்களின் மறைவையொட்டி துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில். (C-25158)
படவரைஞர் 2002

## மரண அறிவித்தல்கள்

### சடாசிவம் சோமசுந்தரம்

(பாலன்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாய் மேற்கு, மானிப்பாயில் வசித்தவருமாகிய சடாசிவம் சோமசுந் தரம் நேற்று (29.11.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடாசிவம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமக னும் சிந்தாமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் சிவராசா (ஜேர்மனி-கொழும்பு), சிவகுமார் (ஜேர்மனி), சிவலிங்கம் (ஸ்ரீகொழும்பு), பஞ்சலிங்கம், பத்மபிரியா ஆகியோரின் பாசமிகு தந்தை யும் அரதாதேவியின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சாந்தலிங்கம், மகேஸ்வரி, அன்னபூரணி ஆகியோரின் சகோதரனும் கண்ணம்மா, பாக்கியம், தர்மரத்தினம், தாமோதரம்பிள்ளை, தில்லையம் பலம், மகேஸ்வரி, மனோன்மணி, தியாகலிங்கம், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் துளசி, தாரணி, லக்சன், லக்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2002) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரசவசாலை லேன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (1.12.1.8)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
ஜெயம் (மகன்)

### திருமதி சின்னத்தங்கம் தங்கராஜா

(சற்குணம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் தங்கராஜா அவர்கள் நேற்று (29.11.2002) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் தங்கராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புவிராசா மற்றும் நாகரத்தினம் (ராசாத்தி) ஆகியோரின் சகோதரியும் அருந்ததி, அரியமலர், காந்திமலர், மனோகரி, மகேந்திரராசா ஆகியோரின் மைத்துனியும் கலியுகமுமாரி (டென்மார்க்), இரசகுமார் (ஜேர்மனி), விஜயன், விகேசந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரசேகரத்தின் (டென்மார்க்) மாமியாரும் அஜிதரன் (டென்மார்க்), அஜிந்தா (டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2002) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டை கிழக்கு,
மானிப்பாய்.
(1.12.1.7)

தகவல்:
க.தங்கராஜா
(புக்கர்)

# அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரத்தில் அனுசரணையாளர் பொறுப்பை ஏற்கும் முடிவுக்கு நோர்வே வந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன.

பெரிய போர்கள், யுத்தத்தில் ஈடுபடாத - மரபு ரீதியாகவே சமாதான வேட்கை கொண்ட - ஸ்கண்டிநேவிய நாடு நோர்வே.

சிறிய நாடாக நோர்வே இருக்கின்ற போதிலும் செல்வந்த நாடாகவும் அதேசமயம் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லாதிக்க நாடுகளுடனும் இந்தியா போன்றவற்றுடனும் இலகுவாகத் தொடர்புகொள்ளக்கூடிய உயர்மட்ட உறவுகளை வைத்திருக்கிறது.

முன்னாள காலனித்துவ நாடாக இல்லாத நோர்வேக்கு இந்தப் பிராந்தியத்தில் தனிப்பட்ட பொருளாதார அரசியல் அபிலாசைகள், விருப்பு வெறுப்புகள் இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இல்லை. ஆனால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உறவு ரீதியாக செல்வாக்குச் செலுத்தக்கூடிய நல்ல அரசியல் தலைமைத்துவம் அதற்குண்டு.

அதற்கப்பால் இத்தகைய சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நிதிவளமும், அதனைத்தாங்குவதற்கான உறுதியும் நோர்வேயிடம் உள்ளது.

இத்தகைய பலகாரணங்கள், நோர்வே இந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க அடிப்படையாக அமைந்தன. சென்ற வருடம் வரை நான் வெளிவிவகார அமைச்சராக இருந்தேன். அப்போதெல்லாம், யுத்தம் புரியும் இருதரப்புக்கள் ஒரு மேசையில் இவ்வளவு விரைவாக ஒன்று கூடிக் கைகுலுக்கிக் கொள்வார்கள் என்பதை நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியவில்லை.

ஆனால் இன்று அந்த அதிசயம் நிகழ்கின்றது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பாராட்டுக்குரியவை என்றார்.

## அரசின் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தில் உட்புறமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன எனவும் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கிறது.

புலிகள் அரசடித் தீவில் அமைத்த நீதிமன்றமும் பழுகாமத்தில் அமைத்த பொலீஸ் நிலையமும் அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் அமையவில்லை என்று கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக கண்காணிப்பாளர்கள் அறிவித்திருக்கின்றனர் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் டெய்ட்டுர் ரொக்கல்சன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றும் வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மந்திகை ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் நிலவும் மருந்து மற்றும் வைத்திய உபகரணப் பற்றாக் குறைகள் குறித்தும் -

வைத்திய நிபுணர் பற்றாக்குறை குறித்தும் -

வைத்திய அதிகாரிகள் சுகாதார அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள் பற்றாக்குறையை நீக்க உடன் நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் அமைச்சர் தயாரத்ன உறுதி அளித்தார்.

வைத்திய நிபுணர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய தென்னிலங்கை வைத்தியர்களை அங்கு நியமிக்க ஏற்பாடு செய்வதாகவும் அமைச்சர் அப்போது கூறினார்.

நவீன வசதிகள் கொண்ட அவசரச் சிகிச்சைப் பிரிவை யாழ்.ஆஸ்பத்திரியில் ஏற்படுத்த 2 கோடி 50 லட்சம் ரூபா உதவி வழங்குவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் தெரிவித்தார். இந்த நிதியை இந்து கலாசார அமைச்சு வழங்கும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஒ-3)

## பேச்சுப் பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சுப்மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பேச்சு நடைபெற்று, தொடர்பு ஏற்பட்டு, அதிகாரப் பகிர்வுர்வுக்கான ஓர் அரசியல் தீர்வு வடிவம் உருப்பெற்றபின்னரே அந்த சமாதான முயற்சிகள் குறித்து அறிவிக்கப்பட்டது.

ஆனால், இலங்கை விடயத்தில் விவகாரம் வேறு. ஆரம்பத்திலேயே நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்து அறிவிக்கப்பட்டுவிட்டது. சமாதான முயற்சிகள் தொடர்பாக கடந்த டிசெம்பர் முதல் பெப்ரவரி வரை நாம் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. அக்காலத்தில்தான் யுத்த நிறுத்த ஏற்பாடு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றுக்கான முயற்சிகளை நாம் வெற்றிகரமாக மேற்கொண்டோம். இந்தக் காலகட்டத்தில் எமது செயற்பாடுகள், காணப்பட்ட முடிவுகள், முன்னேற்றங்கள் போன்றவற்றில் இரகசியம் பேணப்பட்டது. ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது.

இப்போது எந்த முடிவு எடுக்கப்பட்டாலும் அடுத்த கணமே அது பகிரங்கமாகிவிடுகிறது. அனைத்து தொடர்பு சாதனங்களும் அரசியல்வாதிகளும் பிய்த்து உதறி ஆராய்கின்றார்கள். அப்படிச் செய்வது சமாதான முயற்சிகளில் சில தாமதங்களை, எரிச்சலைத் தந்தாலும் கூட, அது ஒரு வகையில் நல்லதே. ஒவ்வொரு முடிவும் அந்தந்தக் கட்டத்திலேயே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு நல்லது கெட்டது விவாதிக்கப்பட்டு, அது சம்பந்தமாக ஓர் இறுதி முடிவை நாம் எட்ட முடிகிறது.

இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரம் போன்று ஓர் இறுதித் தீர்மானத்தை எட்டிய பின்னர் அது குறித்து விவாதித்துக் குழப்புவதைவிட கட்டம் கட்டமாக முடிவுகள் பகிரங்க விவாதத்திற்கு உள்ளாகி இணக்கம் காணப்படுவதும் அதன்பின்னர் அடுத்த கட்டத்துக்கு நகர்வதும் நல்லது தானே.

என்றாலும் ஒரு விடயத்தை தீ[illegible] அடுத்த விடயத்தில் சிக்கல் வரு[illegible] அனுசரணைப் பணியில் இத்தகை[illegible] சிக்கல்கள் உள்ளன. அது தவிர்க்[illegible] முடியாதது.

நீண்ட காலமாக அமைதியி[illegible] - சமாதானத்தின் - இன்பத்தை[illegible] நுகர்ந்து வரும் நாடு நோர்வே. சர்[illegible] தேச ரீதியில் அமைதியும் ஸ்திரமு[illegible] இருந்தால்தான் இந்த சமாதான நிலை[illegible] நீடிக்கும் என்பதை நாம் உணர்ந்து[illegible] ளோம். இதனால்தான் சர்வதேச ரீ[illegible] யில் - நாடுகளுக்கும் நாடுகளுக்கு[illegible] இடையில் என்ற நிலையைத் தாண்டி[illegible] - உள்நாட்டு யுத்தங்களிலும் சம்பந்தப்பட்டு அமைதியையும் சமாதானத்தையும் ஸ்திரத் தன்மையையும் ஏற்படுத்தும் நன்முயற்சியில் நோர்வே ஈடுபடுகின்றது. அதற்குரிய பக்கச்சார்பின்மையும் தனித்துவமும் தனிப்பட்ட அபிலாசை - நோக்கம் இல்லாத தன்மையையும் நோர்வே கொண்டிருப்பது இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் உரிய தகுதியை அதற்குத் தந்துள்ளது - என்றார் விடர் ஹெல்கிஸன். (ஒ)

## வாத்தியக் கருவிக[illegible] அன்பளிப்பு

மருதனார்மடம் இராமநாத[illegible] கல்லூரியின் பாவனைக்கென [illegible] ஆயிரம் ரூபா செலவில் புதிய [illegible] யத்தேய வாத்தியக் கருவிகள் வ[illegible] கப்பட்டுள்ளன. (எ-[illegible])


**பயிற்சிப் பத்திரிகையாளர்கள்**

*(ஆண்கள் மட்டும்)*

☆ கல்வித் தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.
☆ கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பயிற்சி அளிக்கப்படும்.
☆ பயிற்சிக்காலம் - ஒரு வருடம்.
☆ பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.
☆ பயிற்சி முடிவில் குறைந்தது மூன்று வருடங்கள் வேலை செய்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். பிணைப் பணமும் செலுத்தவேண்டும்.
☆ எழுத்துப் பரீட்சை - நாளை ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு இல.361, கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பணிமனையில் நடைபெறும்.

சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.



SUBRA (14) சித்தன்கேணி

"வலி.மேற்கு மாணவர்களின் மனதை வென்ற ஒரேயொரு நிறுவனம்"

புதிய பிரிவுகள் : தரம் 8 முதல் O/Lவரை

ஆரம்பம்: 01.12.2002

ஞாயிறு காலை 9.00 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழாம் ★

(C/25140)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

மந்திர சக்தி

I.T.N.

பலாலி வீதி, திருநெல்வேலி. (c-25162)



**Computer Type Setters**

கணனி எழுத்துக் கோப்பாளர் தேவை. திறமைக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும். 07.12.2002 ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

முகவரி:
விள.இல.1709
உதயன், யாழ்ப்பாணம். (C/25134)



**முகாமைத்துவ பயிலுநர்கள்**

☆ கல்வித் தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
☆ பயிற்சிக்காலம் - ஆறு மாதங்கள். பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.
☆ குடாநாட்டுக்கு வெளியிலும் பணியாற்ற தயாராயிருக்க வேண்[illegible]
☆ பயிற்சி முடிவில் மூன்று வருடங்கள் வேலை செய்வதற்கா[illegible] உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதுடன் பிணைப் பணமும் செலுத்தவேண்டும்.
☆ எழுத்துப் பரீட்சை - நாளை ஞாயிறு முற்பகல் 11மணிக்கு இல.361, கஸ்தூரியார் வீதியிலுள்ள 'உதயன்' பணிமனையில் நடைபெறும். சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.



**ஓராண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 27 - 05 - 1940



மறைவு 10 - 12 - 2001

திருமதி சின்னத்துரை கமலாதேவ[illegible]

திதி: 30.11.2002

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும் - உன்
திருமுகம் ஒரு தரம் பார்த்தால் போதாதோ எமக்கு?

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தாய் சகோதரர், சகோதரிகள்.

உடுவில் வீதி,
மானிப்பாய். (11088)



IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் -200[illegible]

விண்ணப்பித்த, விண்ணப்பிக்க இருக்கும் மாணவர்களுக்கான அறிவித்தல்

எமது புலமைப்பரிசில் திட்டத்தின்,

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவுத்திகதி: | 15.12.2002 |
| தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படும் திகதி: | 21.12.2002 |
| தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி: | 29.12.2002 |
| தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி: | 02.01.2003 |

புலமைப்பரிசில் கற்கைநெறிகள்
ஆரம்பமாகும் காலப்பகுதிகள் : ஜனவரி 2003, மார்ச் 2003, மே [illegible] யூலை 2003, செப்ரெம்பர் 2003.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதன் ஊடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.



**RAMCO CEMENT**

ராம்கோ சீமெந்து

இலங்கையில் மட்டுமா இல்லை

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு! ராம்கோ சீமெந்து வந்துவிட்டது! முன்கூட்டியே பதிவு செய்யவும்! போக்குவரத்து விநியோகம் இலவசம்!!

*முக்கிய குறிப்பு :*
குடாநாட்டு மக்களின் பல கோடி ரூபா பணத்தை மீதம்படுத்திய சீமெந்து ராம்கோ சீமெந்து


ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்

**ஈஸ்வரபகவான் & கொம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், T.P. : 021 222 2350

(E/1147)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.11.2002இல் அச்சி[illegible] வெளியிடப்பெற்றது.

அதிசய உப உணவுப் பொருள்!

மூலிகைகளின் அரசன் **ரிஷி காளான்**

இது இப்போது மலேசியா DXN நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு, இந்தியா உட்பட 22 நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.
ரிஷி காளான் எம் நாட்டிற்கும் அறிமுகமானது எம் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இக்காளானைக் கொண்டு தயாரித்த மாத்திரைகள், கோப்பி, பற்பசை முதலியன இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
இதன் அநேக பயன்களைப் பல கருத்தரங்குகளில் ஆதாரத்துடன் எடுத்து விளக்க இதில் பிரசித்திபெற்ற Dr.தங்கராஜா அவர்கள் இந்தியாவிலிருந்து வருகிறார்.

இந்த ரிஷி காளான், 5000 ஆண்டுகளுக்கு முன், சீன, ஜப்பானியர்களால் அறியப்பட்டது. 1972இல் ஜப்பானில் உள்ள கிளியோடா பல்கலைக்கழக, தாவரவியல் ஆய்வாளர்கள், ரிஷியை வெற்றிகரமாகப் பயிரிட்டார்கள்.

**ரிஷி காளான்** - மனித உடலில் அழிந்த கலங்களை அகற்றி, புதிய கலங்களை உருவாக்கி, தசை நார்களை சீராக இயங்கச் செய்து, உடலில் உள்ள நோய்களைக் குணமாக்கி, நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.

**ரிஷி காளான்** - நோய் தடுப்பிற்கும், நீண்ட ஆயுளுக்கும் மிக முக்கியமானது. கடினமான நோய்களான புற்றுநோய், ஆஸ்துமா, ஒவ்வாமை, அதிகப்படியான கொழுப்பு, கொலஸ்ட்ரோல், ஈரல்நோய், சலரோகம், சோர்வு, உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம் இப்படிப்பட்ட ஆட்கொல்லி நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கிறது.

| திகதி | நேரம் | இடம் | முகவரி |
|---|---|---|---|
| 30.11.2002 | மாலை 05.30 | அமெரிக்கன் மிஷன் பாடசாலை | உடுப்பிட்டி |
| 01.12.2002 | காலை 09.30 | விசாலாட்சி வித்தியாலயம், கே.கே.எஸ். றோட் | மல்லாகம் |
| 01.12.2002 | மாலை 04.30 | பல்கலைக்கழகம், கேட்போர்கூட நூலகம் | யாழ்ப்பாணம் |
| 02.12.2002 | மாலை 06.00 | ஹோட்டல் வசந்தம், கண்டி றோட் | வவுனியா |
| 03.12.2002 | மாலை 05.30 | YMCA கேட்போர் கூடம், வைத்தியசாலை வீதி | யாழ்ப்பாணம் |
| 04.12.2002 | மாலை 05.30 | ஞானாலயா மண்டபம், 103, தபால்கந்தோர் றோட் | திருகோணமலை |
| 05.12.2002 | மாலை 05.30 | IBM மண்டபம், கங்காணி குலத்தெரு | புத்தளம் |
| 07.12.2002 | மாலை 05.30 | சரஸ்வதி மண்டபம், லோரன்ஸ் றோட் | பம்பலப்பிட்டி |
| 08.12.2002 | காலை 10.30 | DBC மண்டபம், ரீட் அவனியு | பம்பலப்பிட்டி |

**ரிஷி காளான் கிடைக்கும் முகவர் நிலையங்கள்**

**கொழும்பு**

**திரு.க.கணேசமூர்த்தி**
றாம் இல.1 பம்பலப்பிட்டி,
தொடர்மாடி சனசமூக நிலையம்,
கொழும்பு 04.
504084

**திரு.நா.சிவகுமாரன்**
16 1/1, பீர் றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
360490

**திரு.ராதாகிருஷ்ணன்**
S.26/2ஆவது மாடி,
கொழும்பு சென்றல்
சுப்பர் மாக்கட்,
கொழும்பு - 11
336375, 436890

**திரு.மு.மாரிமுத்து**
களிக்கோஸ்
114/1, 3ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.
528200, 439414

**தெஹிவளை**

**திருமதி விஜயலெக்சுமி பெரியசாமி**
BJ 124/3, டட்லி சேனநாயக்க
மாவத்தை,
தெஹிவளை.
01-739671

**சிலாபம்**

**திரு.அன்ரனி செபஸ்தியான்பிள்ளை**
42/1, குருநாகல் றோட், சிலாபம்.
032-22495

**திருகோணமலை**

**டாக்டர் ராமச்சந்திரன்**
ராம் கிளினிக்,
57, பிரதான வீதி, திருகோணமலை.
026-22207

**கண்டி**

**திருமதி ரவுீட் கமலோசனி**
265, பேராதனை வீதி, கண்டி.
08-238783

**திரு.S.தேவராஜன்**
சென்ரல் மெடிக்கல்,
92, தலதா வீதி, கண்டி.
08-223677, 08-226443

**திரு.குமார்**
194A, D.S.சேனநாயக்க வீதி, கண்டி.
08-237063, 08-225039

**மட்டக்களப்பு**

**திரு.C.இராஜரட்ணம்**
7/9, ஒலிவ் லேன், மட்டக்களப்பு.
065-23374

**திரு.A.தேவேந்திரராஜா (காந்தி)**
513/36, கண்ணகை அம்மன்
கோயில் வீதி, மட்டக்களப்பு.
065-23482

**திரு.க.கலாதரன்**
இல.28, 2ஆம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.
065-23556

**அக்கரைப்பற்று**

**திரு.M.R.M.சிப்லி ரபீக்**
கிழக்கு வீதி, அக்கரைப்பற்று.
067-77427, 072-863660

**மன்னார்**

**திரு.M.சிமியோன் குறூஸ்**
சின்னக்கடை, மன்னார்.
023-32337

**வவுனியா**

**டாக்டர் உமாபதி**
ஸ்ரீ சங்கர் மெடி கிளினிக்
5ஆவது லேன், மன்னார் றோட்,
வவுனியா.
024-21241, பக்ஸ்: 024-21283

**திரு.S.சிவகுமார்**
சிவா பிறதர்ஸ்
தொலைத்தொடர்பு நிலையம்,
பசார் வீதி,
வவுனியா.
024-22022, 024-22021

**கல்முனை**

**திரு.து.ரூபாகரன்**
57, உடையார் றோட்,
கல்முனை.
067-20056

**கிளிநொச்சி**

**டாக்டர் K.ஜீவரட்ணம்**
8, ஆயுர்வேத வைத்தியசாலை,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.
024-21047

**திரு.S.பாலேந்திரன்**
C/o.Dr.கெங்காதரன்,
நீலன் பார்மசி பிறைவேட்
லிமிட்டெட்,
பிரதான வீதி, கிளிநொச்சி.
078-619294

**யாழ்ப்பாணம்**

**டாக்டர் சுல்வரி கந்தையா**
நகரசபை லேன், மானிப்பாய்.
021-2222554

**திரு.T.V.கிருஷ்ணசாமி**
இந்திராணி வாசம்,
சந்தை வீதி, உரும்பிராய்.
021-2223392, 021-2222654

**திரு.வி.விஜயநேசன்**
36, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021-2223123, 021-2223299

**திரு.S.தயாளன்டேஸ்வரன்**
மாரியம்மன் மிலேனியம் ரெலக்ஸ்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
070-213073, 070-212778

**திரு.O.பாலசுப்பிரமணியம்**
துன்னாலை மத்தி,
கரவெட்டி.
070-212807

**Dr.எஸ்.ராஜபூபதி**
ராஜாராஜபதி மெடிக்கல் கிளினிக்,
மீசாலை தெற்கு, மீசாலை.
070-212538

**திரு.S.புஸ்பநாதன்**
துர்க்கா புத்தகசாலை,
கந்தரோடை றோட்,
சுன்னாகம் மத்தி, சுன்னாகம்.
0777-731919

DXN நிறுவனம் மலேசியன் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் ISO 9002 சான்றிதழ் வழங்கப்பட்டு, ISO 14001 சான்றிதழ்மூலம் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது சுகாதார பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டது.
2500இற்கு மேற்பட்ட விநியோகஸ்தர்கள் எம்மிடம் இருக்கின்றார்கள்.

DXN

**MAGNUM INVESTMENTS (PVT) LTD.**
**15, Stamboul Place, Colombo - 03**
Tel.:575753, 074-723396 Fax: 074-723396
E-mail: info@magnumsl.com

தற்போது 22 நாடுகளில் விற்பனையாகின்றது.


## பஞ்சபுராணப் போட்டி

தென்மராட்சி,நவ.30

தென்மராட்சிப் பிரதேச மாணவர்களிடையே இந்து சமய அறிவை வளர்க்கும்முகமாக சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் கிராம மட்டத்தில் பஞ்சபுராண போட்டியினை எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் நடத்தவுள்ளதாக மன்றச் செயலாளர் க.சிவசங்கரநாதன் அறிவித்துள்ளார். (ம-117)

## 'சுதந்திரப் பறவைகள்' வெளியாகியது

வடமராட்சி,நவ.30

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'சுதந்திரப் பறவைகள்' ஐப்பசி, கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது.

'நீ தந்த பெருமையில் உயர்ந்து, நிமிர்ந்து நிற்கிறோம்' என்ற தலைப்பிலான ஆசிரியத் தலையங்கத்துடன் வெளியாகியுள்ள இந்த இதழில் 'சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண்...', 'நீங்களும் இரவும் நாங்களும்', 'மறுபடி நிகழும் ஒருவருகை', 'சாணைபோட மறுக்கப்பட்ட வாள்ளொன்று வந்தது', 'இராணுவத்தின் பாதுகாப்புச் சிந்தனை மக்களின் பாதுகாப்பின்மையே', 'தீச்சுடர்', 'பிரச்சினைகளின் சங்கமிப்பும் தீர்வுக்கான முயல்வும்', 'இறகுகள் விரிப்பதற்கே', 'எப்போதும் எதிரிக்குப் பேரிடியாக', 'உனது வாழ்வையும் நாம் நேசிக்கிறோம்', 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002 நிகழ்வும் பகிர்வும்' ஆகிய தலைப்புகள் உட்பட பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. (ம-173)

## யாழ்.மறைக்கோட்ட இளைஞர் தினம் நாளை

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் தினம் நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மறைக்கோட்டத்தில் உள்ள அனைத்துப் பங்குகளிலும் இயங்கும் இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

நாளை காலை 9.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து, பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் இளைஞர் தின நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளுடன் இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நாடகம், குழுப்பாடல் கையெழுத்து ஆகிய சஞ்சிகை வெளியீடு, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (எ-8)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.30

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் 125 குடும்பங்களுக்கு தலா ஒவ்வொரு தென்னங்கன்றுகளை வழங்கவுள்ளனர்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மூன்று அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பங்களுக்கு இன்று மாலை 4 மணியளவில் கழக அலுவலகத்தில் வைத்து இவை வழங்கப்படும் என கழகத்தலைவர் மா.தியாகராஜா அறிவித்துள்ளார். (எ)

## வழக்கம்பரை அம்மன் ஆலயத்தின் வீதிகளில் நிழல் தரும் மரங்கள்

சுழிபுரம்,நவ.30

தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வீதிகளில் நிழல் மரங்கள் நடுகைசெய்யப்பட்டு வருகின்றன. நிழல் தரும் மரங்களை நடும் செயலானது ஏனைய ஆலயங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-28)

## ஓட்டோ அன்பளிப்பு

தும்பளை இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் கோவிலுக்கு இந்து கலாசார அமைச்சினால் ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கோயில் குருக்கள் சிவஸ்ரீ எஸ். இலட்சுமண ஐயரிடம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் வைத்து ஓட்டோவை வழங்கினார். (ம-173)

## ஸ்கந்தா நுண்கலை மாணவர் மன்றத்தின் இசை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

ஸ்கந்தவரோதயக் கல்லூரி நுண்கலை மாணவர் மன்றத்தினால் நாளை (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த 'ஆனந்த்' இசைக்குழுவின் இசை நிகழ்வு எதிர்வரும் 25.12.2002 புதன்கிழமை கிறிஸ்மஸ்தினத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

ஸ்கந்தா நுண்கலை மாணவர் மன்றம்.

(11204)



## வாழ்த்துகின்றோம்

பாதிக்கப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபை
உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுக்காக
பல வகையிலும் செயற்பட்ட
செயல் வீரர் மாண்புமிகு கௌரவ இந்து கலாசார அமைச்சர்
**தியாகராசா மகேஸ்வரன்** அவர்களையும்
மத்திய போக்குவரத்து சபைத் தலைவர் U.M.A. **பரூக்**
அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

செ.செல்வராசாவும் அவருடன்
பதவியுயர்வு பெற்ற நண்பர்களும்.

(11192)


## சிறுவர், முதியோர் நலன்பேண நலன்புரிச் சங்கம்

சிறுவர், முதியோர், அங்கவீனர் ஆகியோரின் நலன்களைப் பேணுமுகமாக வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச செயலகத்தில் நலன்புரிச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நலிவுற்ற சிறுவர், முதியோர், அங்கவீனர்களுக்கு உதவும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நலன் புரிச்சங்கத்தின் பெயரில தனியான வங்கிக் கணக்கு ஒன்றும் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.(ம-173)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும்.
இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=

**BHARATHI PATHIPPAKAM**
OFFSET PRINTERS
*430, K.K.S. Road, Jaffna.*
*T.Phone : 021 222 3081*



**Right Angle Valve-Charcoal**

முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

ஏக முகவர்கள்:
[illegible]
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. 337286 (நேரடி). 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

**WATERTEC**
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வரவேற்பு உபசார அழைப்பு



மணமகன்
**பிரம்மஸ்ரீ கணேஸ்வர சர்மா**

மணமகள்
**சௌபாக்கியவதி அபர்ணா**

சித்திரபானு வருஷம் கார்த்திகை மாதம் 2ஆம் நாள்(18.11.2002) திங்கட்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தின் வரவேற்பு உபசாரம் யாழ்ப்பாணத்தில் இன்று (30.11.2002) சனிக்கிழமை மாலை 4.30(நியம)மணிக்கு சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

ஸ்ரீ.ஸ்ரீமதி.நா.சா.பாலசுந்தரக் குருக்கள் தம்பதிகள்
*கொழும்பு.*

ஸ்ரீ.ஸ்ரீமதி.செ.பரமானந்தக் குருக்கள் தம்பதிகள்
*நீராவியடி.*

(11181)

## UDUVIL GIRLS - COLLEGE

Presents
**Nativity Suites**
(a Christmas Cantata)

**On Sunday 1st December 2002**
**at 4.30 p.m.**
at
***The C.S.I Church - Uduvil***

You are Cordially invited
*The Principal, Staff and Students*

(C-25144)

## இரண்டாம் ஆண்டு நெஞ்சகலாத நினைவலைகள்



## அமரர் இராசு செல்வரத்தினம்

(அம்பாள் மரக்காலை உரிமையாளர்)

தோற்றம் 1942-08-03 | மறைவு 2000-11-30

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

உமை இழந்தோம் எம் வாழ்வையே
இழந்தோம் போற்றுவோம் உம் உள்ளம்
ஆற்றுக எம் நெஞ்சம்
என்றும் நின் சிந்தையில் - நாம்
ஊர் பெருமகனே! என்றும் உறவுகளுடன்
எழுத்துருவாய் வாழுகின்றீர் - நீர்!
ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

*இல.256, நாவலர் வீதி,*
*இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.*

(11189)

உம் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

★ 40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச்செய்வதன்மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
★ X-RAY, ECG சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி
**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(11174)

## துயர் பகிர்தல்

### செல்வி தமிழினி வீரசிங்கம்

கொழும்பு பிறவுண்சன் இன்ரஸ்ரீஸ் உரிமையாளர் வேலணை **வீரசிங்கம் - அன்னலட்சுமி** தம்பதிகளின் அருமை மகள் கலைமலி **செல்வி தமிழினி வீரசிங்கம்** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்; சிந்தை கலங்கினோம்; பிரிவுத்துயர் பகிர்கிறோம். அவர் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

*65/2, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(11183)

**திருமதி இராசமலர் நடராஜா**
(காரைநகர்)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை மகேஸ்வரி

ஆவரங்கால் மேற்கு, வங்கி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை மகேஸ்வரி அவர்கள் 25-11-2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபையின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி, தயாபரன், உதயானந்தன், மோகனதாஸ், டாழினி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2002) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் கிழக்கு கரதடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்கி ஒழுங்கை,*
*ஆவரங்கால் மேற்கு.*

(11188)

தகவல்:
கனகசபை (கணவர்)

# ஆட்சியைத் தொடரவேண்டுமேயானால் ஆளுங்கட்சி செய்யவேண்டியது என்ன?

## இக்கட்டான நிலை ஏற்படலாம் என ஆய்வாளர்கள் கருத்து

ஐ.தே.முன்னணி அரசின் ஆட்சி ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள காலமிது.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதியின் பின் ஆட்சி நிலைக்குமா? நீடிக்குமா? அல்லது அரசியல் மாற்றம் நிகழுமா? என்ற கேள்வி நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்தையும் தொட்டு விளையாடுகின்றது.

இக்கேள்வி அலட்சியம் பண்ணக்கூடிய கேள்வி அல்ல - அர்த்தமுள்ள கேள்வியாக எழுந்திருக்கிறது.

காரணம், அரசின் சொந்தப் பலம் 95 நாடாளுமன்றப் பிரதிநிதிகளேயாகும் - மிகுதி 20 பிரதிநிதிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12 பிரதிநிதிகள், மலைநாட்டுத் தமிழர்களின் இரு கட்சியையும் சேர்த்து 8 பிரதிநிதிகளாவர்.

இவர்கள் இன்னுமொரு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கச் சஞ்சலப்படும் நிலையிலும், ஐ.தே. முன்னணியின் சில நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட நிலையிலும் வேதனையோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பவர்கள்.

முஸ்லிம் காங்கிரஸின் ஒரு பகுதியினர் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்துக்கொண்டிருந்தனர்.

கொத்மலை நீர் மின்சாரத் திட்டத்தால் - மலைநாட்டுத் தமிழர்கள் கொதித்துக்கொண்டிருக்கின்றனர்.

இவை ஆட்சியாளருக்கு எதிராக ஏற்பட்டிருக்கும் குடும்பச் சண்டை. "வேண்டாப்பெண்ணுக்கு கால் பட்டாலும் கை பட்டாலும் கலகம் தான்" என்ற நிலை இன்றைய ஆட்சியாளர் நிலை.

தமிழர் கூட்டமைப்பைப் பொறுத்தவரை - ஆட்சியை முழுமையாக ஆதரிக்கக்கூடிய நிலையில் அவர்களும் இல்லை. காரணம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அரசு நடந்துகொள்ளவில்லை.

உதாரணமாக அதி பாதுகாப்பு வலயங்களாகவுள்ள பகுதிகளிலிருந்து இராணுவம் ஒதுங்கவில்லை - மக்கள் மீள்குடியேறவில்லை.

புலிகளின் தடையை நீக்கிய போதே அரசு, புலித்தலைவர்களுக்கு எதிராகவுள்ள வழக்குகளை ரத்துச் செய்திருக்கவேண்டும் அல்லது காலதாமதப்படுத்தியிருக்கவேண்டும்.

ஆனால், அரசு அப்படிச் செய்யாது விட்டதால் புலிகளின் தலைவருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்திருக்கிறது.

இது 165 நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கையில் வைத்திருந்தே ஜே.ஆர். 16 நாடாளுமன்றப் பலத்தோடு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமரர் அமிர்தலிங்கம்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றிப் பயங்காட்டிய ஐ.தே.கட்சியின் நரித்தந்திரத்தையே நிலைநாட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவுசெய்யப்பட்ட மின்சார சீர்திருத்தச் சட்டமூலத்தின்மூலம் அரசு தமிழ் மக்களைப் புறக்கணிப்பது திட்டவட்டமாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளுக்கு ஒரு சதமும் ஒதுக்கப்படவில்லை. கிழக்கில் தமிழ்ப் பகுதிகளுக்கு 2 கோடி ரூபா வீதமும் - அம்பாறை சிங்களவர் வாழும் பகுதிக்கு 19 கோடி ரூபாவும் - சேர்வலை சிங்களத் தொகுதிக்கு 6 கோடி ரூபாவும் ஒதுக்கியதன்மூலம் அரசின் சமாதான உள்நோக்கம் புரிகின்றது.

அதுமட்டுமன்றி - திருமலையிலிருந்த மின்சார நிர்வாகத்தை அப்படியே அநுராதபுரத்தோடு இணைப்பதன்மூலம் தமிழரின் தலைநகரை நொண்டியாக்கி - தமிழர்களின் கோரிக்கையைக் கொச்சைப்படுத்திவிட்டார்கள்.

இந்த சட்டமூலத்தை எதிர்த்துப் பேசிய தமிழர் கூட்டமைப்பு, பின்னர் நாடாளுமன்றத்தில் அச்சட்டமூலத்தை ஆதரித்து கையுயர்த்தியதையும் தமிழ்மக்கள் ஜீரணிக்கவில்லை.

### சிங்களப் பிரதேசம்

திருமலையை சிங்களப் பிரதேசமாக்க முழுமையாகச் செயற்பட்ட கட்சி ஐ.தே. கட்சி - இன்றும் திருமலையில் நடைபெறும் பல்வேறு தில்லுமுல்லுகளுக்குப் பொறுப்பான கட்சியும் அதுவேயாகும்.

இவ்வாறான செயல்கள்மூலம் தமிழ் மக்கள்மீது 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்' அரசின் ஆட்சி நீடிப்பை கூட்டமைப்பு ஆதரிக்குமா?

அதற்குப் புலிகள் ஆதரவு தருவார்களா என்பது கேள்விக்குறியாகும்.

விடுதலைப் புலிகள் அரசியலில் மிகவும் தெளிவாகவே இருக்கிறார்கள். சித்திரையில் நடைபெற்ற தமிழீழத் தேசியத் தலைவரின் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் தலைவர் திட்டவட்டமாகவே "பிரதமர் ரணிலினால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணமுடியாது" என்று கூறிவிட்டார்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கு முன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் ஸ்திரமற்ற அரசால் தீர்வுகாணமுடியாது எனக் கூறியுள்ளார்.

பேச்சுக்களின் முடிவில் வரும் எந்த அரசுடனும் சமாதானப் பேச்சைத் தொடர நாம் தயார் என ஒரு சமிக்ஞையும் காட்டியுள்ளார்.

இவற்றை மீறித் தமிழ்க் கூட்டமைப்பினர் செயற்படமுடியாதது ஒரு புறம் - மறுபுறம். கூட்டமைப்பினரும் தேர்தலைச் சந்திக்கமுடியாத நிலையிலுள்ளார்கள்.

இவ்வாறான இக்கட்டான நிலையில் ஆட்சி தொடரவேண்டுமேயானால், ஆளுங்கட்சி செய்யவேண்டியதென்ன?

ஜனாதிபதியோடு ஒத்துப்போகக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இந்த நிலையை உருவாக்க பிரதமர் ரணிலால் முடியவில்லை. காரணம், அவரைப் பிரதமராக்கக் கட்சி மாறி ஆதரவு தந்தவர்களைக் கைவிடமுடியாதநிலை.

எனவே, அரசு கலைப்பு, ஆட்சிக் கலைப்பு நிலையிலிருந்து ஆளுங்கட்சி தன்னையும், தன்கட்சி ஆட்சியையும் பாதுகாக்கவேண்டுமேயானால், ஜனாதிபதியோடு ஒத்துழைக்கக்கூடிய ஒருவரை ஐ.தே.முன்னணி பிரதமராக்கவேண்டும்.

ஆனால், அதற்கு ரணில் ஒத்துப் போகமாட்டார். 'கூழுக்கும் ஆசைப் பட்டு மீசைக்கும் ஆசைப்படுகிறது' ஐ.தே.முன்னணி.

ஆனால், இதில் ஒன்றை உணர்ந்தால்தான் மற்றொன்றை முழுமையாக அடையமுடியும்.

ஐ.தே.முன்னணியின் தலைமையில் மாற்றம் நிகழாதவரை ஆட்சியில் நீடிப்பு ஆபத்தானதேயாகும்.

### நாடாளுமன்றக் கலைப்பு

தேர்தல்மூலம் நாடாளுமன்றம் கூடி ஒருவருடத்தின் பின் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம்மிக்கவராகப்படுகிறார்.

இதன்படி வருகிற டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப்பின் அரசமைப்புப்படி ஜனாதிபதிக்கு இந்த அதிகாரம் பழம் நழுவிப் பாலில் விழுகிறது.

அன்றிலிருந்து ஒவ்வொரு நிமிடமும் ஆட்சியாளருக்கு விஷப்பரீட்சைக்குரிய காலங்களாகும்.

'கரணம் தப்பினால் மரணம்' என்ற அபாய அரசியற்பாதையில் செல்ல முஸ்லிம் காங்கிரஸோ அல்லது மலைநாட்டுத் தமிழர்களோ அரசியல் தற்கொலையாளர்கள் அல்ல.

எனவே, அவர்கள் அதிகார பலமுள்ள பகுதியில் இணைந்து ஆட்சியைத் தொடர்வது சாணக்கியமாக அமையும்.

**பூ.ம.செல்லத்துரை**

ஏனெனில், பொருள் விலையேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், உற்பத்தியின்மை ஆகியவற்றால் நாட்டின் ஆணிவேரே ஆட்டங்கண்டுள்ளபோது 600 கோடி ரூபாவை ஏப்பமிடும் தேர்தல் அவசியமா?

அந்தத் தேர்தலில்கூட ஒரு ஸ்திரமான ஆட்சி அமையும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கமுடியும்?

இந்த ஆட்சிதான் வரும் என்று எவ்வாறு நம்பமுடியும்.

நடந்துமுடிந்த தேர்தல்களில் சிங்கள வாக்காளர்கள் நாட்டுக்குத் தேசியப் பிரச்சினையைவிட வயிற்றுப்பிரச்சினைக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்ததை நன்கு உணர முடியும்.

ஆகவே, திடீர்த் தேர்தலை தவிர்க்க இரு வழிகள் இருக்கின்றன.

ஒன்று ஜனாதிபதியுடன் ஒத்துப் போகக்கூடிய சரியான சூழலை ஐ.தே.கட்சி உருவாக்கி இருகட்சிகளும் இணைந்து ஒரு தேசியத் திட்டத்தை உருவாக்கி ஆட்சியைத் தொடர்வது.

அல்லது, இன்றைய நாட்டில் சமாதான நிலைமைகள் தொடர்வதனால் அதிகாரப்பலம் மிக்க ஜனாதிபதியின் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவர உதவுவது.

ஐதேகட்சியால் 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பில் அத்தியாயம் 8இன் 44ஆம் சரத்தின் முதலாம் பிரிவின்படி பிரதமரோடு கலந்தாலோசனை செய்து காலத்துக்குக் காலம் அமைச்சர்களின் எண்ணிக்கை, கடமைகள் தொடர்பான விடயங்களைத் தீர்மானிக்கவேண்டும்.

ஆனால், 44ஆம் சரத்தின் 3ஆம் உட்பிரிவின்படி அமைச்சர்களையும் அவர்களின் பொறுப்புக்களையும் மாற்ற ஜனாதிபதியால் முடியுமெனக் கூறப்பட்டுள்ளது.

45ஆம் சரத்தின் பி(2) இல் பிரதமரோடு எந்த விடயமும் கலந்தாலோசனை செய்யப்படவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், பிரதமருடன் கலந்தாலோசனை செய்ய ஜனாதிபதி விரும்பினால் மட்டுமே அவர் அதைச் செய்யலாம் - என அரசியல் அமைப்பின் 8ஆம் அத்தியாயத்தின் 44ஆம் சரத்தின் முதலாம் பிரிவில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர்கள் நியமனம்

இதன் அடிப்படையில் அமைச்சர்களை நியமிக்கவும் - அகற்றவும் அவர்களுக்கான கடமைகளைப் பகிர்ந்தளிக்கவும் அதை அகற்றவும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

இவை நாடாளுமன்றப் பலத்தை விட ஜனாதிபதிக்குரிய அதிகாரப் பலமாகும்.

இந்த அதிகாரப் பலத்தை ஜனாதிபதி இதுவரை பயன்படுத்தவில்லை.

தனக்கெதிரான அமைச்சர்களையும் தனது அரசுக்குக் குழிபறித்தவர்கள் இன்று ஆட்சியில் அமைச்சர்களாக இருப்பவர்களையும் அகற்றவோ அல்லது அவர்களின் திணைக்களங்களை மாற்றவோ இல்லை.

ஆனால், இந்த நிலை தொடரும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. மார்கழி மாதம் மழைக்குரிய பருவகாலம். மின்னாமல் முழங்காமல் மழைபொழியும் காலம். அரசியலில் எதுவும் எப்படியும் நடக்கலாம். அரசியலில் இன்றைய எதிரி நாளைய நண்பன். ஆட்சியைக் கலைத்து திடீர்த் தேர்தல் நடத்துவதா என்பதை ஜனாதிபதி தீர்மானிப்பார்.

தேர்தலைத் தவிர்த்து யார் குத்தியும் அரிசியாகவேண்டும். நாட்டில் சமாதானமும் சாந்தியும் தொடரவேண்டும் என்பதைத் தீர்மானித்து நல்ல முடிவை எடுக்கவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றப் பிரதிநிதிகளுடையது.

நாடாளுமன்றம் தொடரவேண்டுமேயானால் திரிசங்கு சொர்க்கத்தை விட சொர்க்கத்துக்கு நேரே போவதே சிறந்த வழி. திரிசங்கு சொர்க்க நிலையில் ஐ.தே.முன்னணியும், சொர்க்கநிலையில் பொ.ஐ.முன்னணியும் இருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலைநாட்டுத் தமிழ்க்கட்சிகள், தமிழர் கூட்டமைப்பு இதர தமிழ்க்கட்சிகள் ஆகிய சிறுபான்மையினர் இணைந்தால் 38 நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் பலம் உண்டு.

இவர்கள் சரியான நிபந்தனைகளோடு அதிகாரப் பலத்தாருடன் ஒன்றிணைந்தால் நாட்டுக்கு நலமாகும்.

---

## கல்விமான்கள் உருவாகுவதற்கு

# சமய வாழ்வுக்கு வழிகாட்டுகின்றவையான திருமுறைகளும் கற்பிக்கப்படவேண்டும்

## பெற்றோரின் கடமை இது என்கிறார் சிவ.மகாலிங்கம்

வலிகாமம் தெற்கு,நவ.30

பெற்றோர்கள் தமது குழந்தைகளை கல்விமான்களாக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்படுவதுடன், அவர்கள் சமய ஒழுக் நெறியில் நின்று சமயவாழ்க்கையைத் தொடர திருமுறைகளையும் கற்பிக்க வேண்டும்.

உடுவில் கல்விக் கோட்டத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட திருமுறைவிழாவில் சிறப்புரையாற்றிய இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆரம்பத்தில் உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பராணந்தன் தலைமையில் இணுவில் பரராசசேகர பிள்ளையார் ஆலயத்தில் இருந்து திருமுறைச் சுவடிகள், சமயகுரவர், நாவலர் ஆகியோரின் உருவப் படங்கள் விழா நடைபெற்ற இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன.

தொடர்ந்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

தொண்ணூறு சதவீதம் சைவமும் தமிழும் செறிந்து வாழும் மக்களைக் கொண்ட உடுவில் கல்விக் கோட்டத்தில், திருமுறை பொக்கிஷங்களின் பெருமைகளை அறியவும் உணரவும் வைத்துள்ளது இத் திருமுறைவிழா.

தமிழ்த்தாய் இன்னும் இளமை மாறாமல் இருக்க தமிழில் எழுந்த இலக்கியங்களே காரணமாக அமைகின்றன. சிலப்பதிகாரம், இராமாயணம், திருக்குறள், தோத்திரங்கள் என்பனவற்றின் தோற்றத்தால் தாய்ப்பால் உண்ட குழந்தைபோல இருக்கமான நிலையில் தமிழ்த்தாய் விளங்குகின்றாள்.

களங்கமில்லாத பக்தியால் அருளாளர்கள் தாம்பெற்ற இறையருளை திருமுறைகளாக்கி எமக்குத் தந்துள்ளனர். படிப்பவர்களின் உடல், உளநோய்,உயிர்நோய்களை போக்கக்கூடிய அருமருந்து திருமுறைகள்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழிமுறைகளைக்காட்டும் ஞானப்பொக்கிஷங்களாக அவை எமக்குவழிகாட்டி நிற்கின்றன. சைவத்தின் உட்பொருளை அறிந்து கொள்ள நாம்அனைவரும் திருமுறைகளைக் கட்டாயம் படிக்க வேண்டும் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா, திருமுறைவிழா சிறப்பு மலரினை வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்துகையில்:-

சைவர்களின் வாழ்வில் - கல்வியில் - பண்பாட்டில் - உளவியலில் - சமூகவியலில் எல்லாம் ஊடுருவி நிற்கும் திருமுறைகளை பாடசாலைகளிலும்,பல்கலைக்கழகங்களிலும் கட்டாயமாக்கி கற்பிக்கவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. பண்ணிசையின் சுர அடிப்படையில் இருந்துதான் கர்நாடக இசை எழுகின்றது. திருமுறைகளும் இசையுடன் இணைந்து கற்பிக்கப்படவேண்டியவை.

திருமுறைகள் மாணவர் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் செறிய வேண்டும் என்றநோக்கில் இவ்விழா அமைகின்றது. என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:-

நாவலர், சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்திருக்காவிடின், எம்மத்தியில் விபூதிபூசும் பழக்கமும், தேவாரங்கள் பாடி பாடசாலைகள் ஆரம்பிக்கும் வழக்கமும் இல்லாது போயிருக்கும். நாவலரின் சீர்திருத்த சிந்தனைகள்தான் இன்றும் சைவ பாரம்பரியங்களை நிலைநிறுத்தியுள்ளன.

திருமுறைகளை உருவாக்கித் தந்த பாரதத்தில் ஆதீனங்கள் தோற்றுவித்த பாடசாலைகளும், சிதம்பரம் நாவலர் உயர்நிலைப் பள்ளியும்தான் காலை தேவாரம்பாடி ஆரம்பிக்கின்றன. ஏனைய பாடசாலைகள் தேசிய கீதத்துடன் ஆரம்பிக்கின்றன.

நம்மத்தியில் நிகழும் மதமாற்றங்களை தடுக்கவும், குழந்தைகளுக்கு சமய சிந்தனைகளை ஊட்டவும் நம்மிடையே யாரும் இல்லை. ஏனைய மதங்களைப்போல ஆலயங்கள், பாடசாலைகளில் நற்சிந்தனைகள், பிரசங்கங்கள், கூட்டுவழிபாடுகள் நடைபெற வேண்டும். ஆன்மீகநூல்கள் வெளியிடப்படல் வேண்டும். புராதன சமயநூல்களை பேணக்கூடிய நூதனசாலைகள் அமைக்கப்படவேண்டும். ஆலயங்களில் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கி அறநெறிக் கல்வியை ஊட்ட வேண்டும்.

குருமார்கள்,ஆலயபரிபாலகர்கள், நிர்வாகிகள் மற்றும் பாடசாலைகள், சமய சடங்குகளில் எல்லாம் சிந்தனைமாற்றங்கள் நிகழவேண்டும்.

மங்களகாரியங்கள், அபரக் கிரியைகள் போன்றவற்றில் ஒழுங்கு, கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் - என்றார்.

கல்விக்கோட்டத்தால் நடத்தப்பட்ட நீதிச்செய்யுள் மனனம், திருமுறை பண்ணிசை புராண படனம், கதாப்பிரசங்கம், தொண்டுபடும் செயன்முறை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் விழாவின் போது வழங்கப்பட்டன.

(எ-152)

---

# சின்மயா மிஷன் ஏற்பாட்டில் 'ஸ்ரீபாத'வில் ஆன்மீக முகாம்

இலங்கை சின்மயா மிஷன் பத்தனையில் உள்ள ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் டிசெம்பர் 24 ஆம் திகதிமுதல் 28 திகதி வரை 5 நாள்கள் தேசிய இளைஞர் ஆன்மீக முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

மேற்படி ஆன்மீக முகாமில் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த தமிழ் இளைஞர், யுவதிகள் பங்குபற்றமுடியும்.

இந்தியாவில் சின்மயாமின் சாந்திபனி ஆச்சிரமத்தில் இந்து சமய சாஸ்திரங்களை கற்ற பிரமச்சாரி ரமண சைத்தன்யா இந்த ஆன்மீக முகாமில் இலகு தமிழில் உரை நிகழ்த்துவார்.

டிசெம்பர் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு ஆன்மீக முகாம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும். 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் குருபாதுகா பூஜையுடன் முகாம் நிறைவுபெறும்.

17 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இந்த ஆன்மீக முகாமில் கலந்து கொள்ளமுடியும் என்றும் -

யாழ்.மாவட்டத்திலிருந்து முகாமில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளலாமென வலி.மேற்குப் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ். குமணன் அறிவித்துள்ளார். (எ-175)

# 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் நல்லையா விருத்தாசலம்

மெழுகுவர்த்தியாகி நின்று
எங்கள் வாழ்வை மேன்மை செய்தீர்
கல்வி கற்று வாழ்விலோங்க
கணமும் துஞ்சாதுழைத்தீர்
எம்முயர்வு கண்டு இன்புற்றீர்
உற்றார்க்கும் அயலவர்க்கும்

உதவிகள் பல புரிந்தீர்!
பாவிகள் நாம் பரிதவிக்க
பாதியில் மறைந்தீர் ஐயா!
ஒரு கணமும் உம் நினைவு
எம் மனத்திநின்றும் அகலாது
உம் ஆன்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம்.

எமது குடும்பத்தின் குல விளக்கு 31.10.2002 கொழும்பில் அணைந்தபோது உடன் நின்று உதவியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.**

*444, Northolt Road,*
*Southharrow,*
*Middlesex*
*HA 2 8EZ - UK*
*T.P. : 07984695896*

*1604 - 350 Alton Towers Circle,*
*Scarbrough, Ontarrio,*
*MIV 5 E3 - Canada.*
*T.P. : 4166091602*

(1224)